# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

*1505 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

### பதவிகள்-வெற்றிடம்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும் மேற்படி வர்த்தமானியில் பார்க்கவும்**

**தேசிய சுவடிகள் திணைக்களம்**

*கட்டிடப்பராமரிப்பு உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு*

*(இலங்கைத் தொழில்நுட்ப சேவை - பிரிவு IIஆ)*

*கட்டிடப் பராமரிப்பு உத்தியோகத்தர் பதவிக்கான (இலங்கைத் தொழில்நுட்ப சேவை - பிரிவு II ஆ) விண்ணப்பங்கள் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான தகைமைகளைக் கொண்டுள்ள ஆட்களிடமிருந்து கோரப்படுகின்றன.*

*1.* **பொதுவான தகைமைகள்**.- (i) *விண்ணப்பகாரர் 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடைய தல்ல)*

(ii) *சிறந்த குண நலன்களையும் சிறந்த தேகாரோக்கியத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும்.*

(iii) *சேவையின் அவசரத் தேவையினைப் பொறுத்து இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு உடன்படுதல் வேண்டும்.*

*2.* **கல்வித் தகைமைகள்**.- *விண்ணப்பகாரர் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு மொழி அல்லது இலக்கியம் எண்கணிதம்/கணிதம் அடங்கலாக நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.*

*3.* **தொழில் தகைமைகள்**.- (i) *மொறட்டுவைப் பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி (Hardy) நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (சிவில்)*

*அல்லது*

(ii) *தேசிய பயிலுநர், தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்பட்ட எந்திரவியலில் டிப்ளோமா.*

*அல்லது*

(iii) *கல்வி உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட எந்திரவியல் டிப்ளோமா.*

(iv) *திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட எந்திரவியலில் உயர் டிப்யோமா.*

(v) *இலங்கை எந்திரவியல் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட எந்திரவியல் பரீட்சையின் பகுதி I இனைப் பூர்த்தி செய்திருத்தல்.*

*அல்லது*

(vi) *இலங்கைத் தொழில்நுட்பச் சேவைச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மேற்குறிப்பிட்ட தொழில்நுட்பத் தகைமைகளை ஒத்த பிற தகைமைகள்.*

*4.* **பதவியில் அமர்த்துவதற்கான நியதிகள்**.- *இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் உடையது. முதல் மூன்றாண்டு காலம் தகுதிகாண் காலமாக அமையும்.*

*5.* **சேவை நிபந்தனைகள்**.- *தாபன விதிக்கோவையின் அத்தியாயம் II இல் 10-12 வரையான பிரிவுகள் ஏற்புடையதாகும்.*

*6.* **சம்பள அளவுத்திட்டம்**.- *இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு I பிரிவு IIA, IIBக்கான சம்பள அளவுத்திட்டம் மாதாந்தச் சம்பளம் ரூபா 14,140 - 10 x 140 - 11 x 150 - 6 x 210 - 14 x 290 - ரூபா 22,510. (அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 6/2006 எம்ரி 2 இன் நியதிகளின்படி) விண்ணப்பகாரர் இப்பதவிக்கு நியமனம் பெற்றதிலிருந்து 03 வருடங்களுக்குள் வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.)*

*7.* **ஆட்சேர்ப்பு முறை**.- *இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தலானது அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 15/90 இற்கு அமைவாக, தொழில்நுட்பச் சேவைச் சபையின் மேற்பார்வையில் இடம்பெறும் போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். பரீட்சைத் திகதியும் பரீட்சைத் திட்டமும் அறிவிக்கப்படும்.*

*8.* **விண்ணப்பிக்கும் முறை :**

*8.1 விண்ணப்பங்கள் கீழே காட்டப்பட்ட மாதிரி விண்ணப்பத்திற்கு அமைய A 4 அளவு தாளினை உபயோகித்து தயாரிக்கப்பட்டு 2007.07.27 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் தேசிய சுவடிகள் பணிப்பாளர், தேசிய சுவடிகள் திணைக்களம், இல. 7, றீட் அவனியு, கொழும்பு 7 எனும் முகவரிக்கு வந்தடையும் வண்ணம் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வருகின்ற கடித உறைகளின் இடப்பக்க மேல் மூலையில் "இலங்கைத் தொழில்நுட்பச் சேவை II "ஆ" இல் கட்டட பராமரிப்பு உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்த்தல்" எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பகாரர்கள் தமது விண்ணப்பங்களினை நிறுவனத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும்.)*

*8.2 விண்ணப்பகாரரின் கையொப்பம் அரசாங்க பாடசாலையின் அதிபர் அல்லது சமாதான நீதவான் அல்லது சமயத்தலத்தின் பிரதான மதகுருமார் அல்லது சட்டத்தரணி அல்லது ஆண்டொன்றுக்கு 94,080.00 இற்குக் குறையாமல் சம்பளம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.*

*8.3 விபரங்கள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அத்துடன் அவை ஏற்றுக் கொள்ளப்பட்டமை பற்றியோ அல்லது நிராகரிக்கப்பட்டமை பற்றியோ விண்ணப்பகாரருக்கு அறிவிக்கப்பட மாட்டாது.*

*8.4 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2007.07.27 ஆகும்.*

*9.* **தவறான தகவல்களை வழங்குதல்**.- *விண்ணப்பகாரர் தேவையான தகைமைகளினைக் கொண்டிருக்கவில்லை என்று நியமனத்தின் முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எந்த நேரத்திலும் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பகாரர் பிழையான தகவல்களைக் கொடுத்துள்ளார் அல்லது தகவல்களை வேண்டுமென்றே மறைத்துள்ளார் எனத் தெரிவின் பின்னர் தெரியவந்தால் எந்தவித நட்டஈடும் இன்றி சேவையிலிருந்து நீக்கப்படுவார்.*

*10. இவ்வறிவித்தல் அல்லது அறிவித்தலுடன் தொடர்புபட்ட விடயங்கள் குறித்தும் இந்த அறிவித்தல் மூலம் வெளிப்படுத்தப்படாத ஏனைய விடயங்கள் குறித்தும் தேசிய சுவடிகள் பணிப்பாளர் தீர்மானம் இறுதியானதாகும்.*

*கலாநிதி சரோஜா வெத்தசிங்க,*
*தேசிய சுவடிகள் பணிப்பாளர்.*

*தேசிய சுவடிகள் திணைக்களம்,*
*இல. 7, றீட் அவனியு,*
*கொழும்பு 7.*

*மாதிரி விண்ணப்பப்படிவம்*

**தேசிய சுவடிகள் திணைக்களம்**

*கட்டிடப் பராமரிப்பு உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு*

*(இலங்கைத் தொழில்நுட்ப சேவை - பிரிவு IIஆ)*

*1.* (i) *முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.*
(ii) *முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர் :-----.*

*2.* (i) *நிரந்தர வதிவிட முகவரி :-----.*
*தொலைபேசி :-----.*
(ii) *தற்போதைய வதிவிட முகவரி :-----.*
*தொலைபேசி :-----.*
(iii) *அலுவலக முகவரி :-----.*
*தொலைபேசி :-----.*

*3. தேசிய அடையாள அட்டை இல. :-----.*

*4. பிறந்த திகதி :-*
*ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.*

*5. விண்ணப்ப முடிவு திகதியன்று வயது :-*
*வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.*

*6. பால் :-----.*

*7. குடியியல் நிலை :-----.*

*8. கல்வித் தகைமைகள் :-*

(i) *க. பொ. த. (சா. த.) பரீட்சை :-----.*
*ஆண்டு :-----. மொழி மூலம் :-----. சுட்டெண் :-----.*

| *பாடம்* | *சித்தியடைந்த தரம்* |
|---|---|
| | |

(ii) *க. பொ. த. (உ. த.) பரீட்சை :-----.*
*ஆண்டு :-----. மொழி மூலம் :-----. சுட்டெண் :-----.*

| *பாடம்* | *சித்தியடைந்த தரம்* |
|---|---|
| | |

*தொழிற்றகைமைகளும் பிற தகைமைகளும் :-----.*

(i) *பின்பற்றிய பாடநெறிகள் தொடர்பான தகவல்கள் :-----.*

| *பாடநெறி நிறுவகம்* | *காலவரையறை இலிருந்து-வரை* | *கற்ற பாடநெறி* | *சித்தியடைந்த தரம்* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(ii) *பிற தகைமைகளுடன் தொடர்புற்ற தகவல்கள் :-----.*

*10. நீர் நீதிமன்றச் சட்டம் ஒன்றின் மூலம் குற்றவியல் தவறுக்காக குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா ? : (ஆம்/இல்லை) :-----.*
*ஆம் எனின், விபரங்கள் தருக :-----.*

*11.* **விண்ணப்பக்காரரின் உறுதியுரை :-**

(i) *இந்த விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்ட விபரங்கள் எனது அறிவுக்கு எட்டிய வகையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் சான்றுபடுத்து கின்றேன்.*

(ii) *என்னால் செய்யப்பட்ட இப் பிரகடனத்தில் ஏதாவது விபரம் பிழையானது என்று தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்பட்டால் தகைமை நீக்கம் செய்யப்படுவேன் என்றும் நியமனத்தின் பின்னர் அறியப்பட்டால் எந்தவித நட்டஈடுமின்றி பதவிநீக்கம் செய்யப்படுவேன் என்றும் நானறிவேன்.*

---

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள்* **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** *வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.*

*வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** *இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, யூலை 13 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, யூன் 29 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2007 ஆம் வருடம் சனவரி மாதம் 06 ஆந் திகதி.*

12. **விண்ணப்பகாரரின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் :**
எனக்கு, திரு./திருமதி/செல்வி ..................................................... என்பவரை மிகவும் நன்கு தெரியும் என்றும் அவர் என் முன்னிலையிலேயே தனது கையொப்பத்தினை இட்டார் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

....................................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்
பதவி முத்திரை.

பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.
திகதி :-----.

13. **திணைக்கள/ நிறுவனத் தலைவரின் சான்றிதழ்** (ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பகாரர்களுக்கு மட்டும்) :
திரு./ திருமதி/ செல்வி .........................................................
இந்த திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ................................ தொடக்கம் இணைக்கப்பட்டுள்ளார் என்றும், இவர் நிரந்தர ஓய்வூதிய உரித்துடைய தற்காலிக/ அமயப் பதவி ஒன்றை வகிக்கின்றார் என்றும், இவர் கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் அனைத்து சம்பள எற்றங்களையும் பெற்றுள்ளார் என்றும், இவரது வேலை/வரவு, நடத்தை திருப்திகரமானது என்றும் இவர் எந்தவித ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் (எச்சரிக்கை தவிர) உள்ளாகவில்லை என்றும், இவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ விடுவிக்க முடியாது என்றும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

..............................................
திணைக்கள/ நிறுவனத்
தலைவரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
திணைக்களம்/ நிறுவனம் :-----.
திகதி :-----.
7-48/ 1

---

## தேசிய சுவடிகள் திணைக்களம்

தச்சுத் தொழிலாளர் பதவிக்கு (வகுப்பு II ) ஆட்சேர்த்தல்

தேசிய சுவடிகள் திணைக்களத்தில் தச்சுத் தொழிலாளர் பதவிக்கான (வகுப்பு II) விண்ணப்பங்கள் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்டுள்ள ஆட்களிடமிருந்து கோரப்படுகின்றன.

2. **பதவியில் அமர்த்துவதற்கான நியதிகள்**.- இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியம் உடையது, முதல் மூன்றாண்டு காலம் தகுதிகாண் காலமாக அமையும்.

3. **சேவை நிபந்தனைகள்**.- தாபன விதிக்கோவையின் அத்தியாயம் 11 இல் உள்ள 10 - 12 பிரிவுகள் இதற்கு ஏற்புடையதாகும்.

4. **சம்பள அளவுத்திட்டம்**.- மாதாந்தாச் சம்பளம் ரூபா 12,140 - 10 x 110 -10 x 120 - 10 x 130 -12 x 140 - ரூபா 17,420 (அரசாங்க நிருவாகச் சுற்றிக்கை இல. 6/2006 இன் பிஎல் 2 - 2006 இற்கு இணங்க)

இப்பதவிக்கு நியமனம் பெற்றதிலிருந்து 03 வருடங்களுக்குள் வினைத்திறமை காண்தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

5. **பொதுவான தகைமைகள்**.- (i) விண்ணப்பகாரர் 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதில்லை).

(ii) சிறந்த குணநலன்களையும் சிறந்த தேகாரோக்கியத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(iii) சேவையின் அவசரத் தேவையினைப் பொறுத்து இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு உடன்படுதல் வேண்டும்.

6. **கல்வித் தகைமைகளும் பிற தகைமைகளும்**.- (i) கல்விப் பணிப்பாளர் தலைமை அதிபதியினால் அங்கீகரிக்கப்பெற்ற பாடசாலை ஒன்றில் தரம் 8 இல் (ஆண்டு 9) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ii) 1/32 அளவுத் திட்டத்தில் வாசிக்கக்கூடிய திறனைக் கொண்டிருத்தல் வேண்டும்.

7. **தொழிற் தகைமைகள்**.- அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி அல்லது தேசிய பயிலுநர் சபை அல்லது தேசிய பயிற்சி அதிகார சபை போன்ற நிறுவகம் ஒன்றிலிருந்து தச்சுத் தொழில் ஒன்றினை 06 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கான பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.

8. **ஆட்சேர்ப்பு முறை**.- தெரிவுகளானது அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல. 15/90 இன் நியதிகளின்படி விண்ணப்பகாரர்களின் செயன்முறைப் பரீட்சை ஒன்றிற்கு உட்படுத்துவதன் மூலம் மேற்கொள்ளப்படும்.

***பாடத்திட்டம்***

(I) தச்சுத் தொழிலாளரின் கருவிகளைக் கொண்டு வேலை செய்யும் திறனைப் பரிசோதித்தல்.
(II) எளிய பொருத்து ஒன்றினை இனங்காணலும் சீராக்கம் செய்தலும்
(III) எளிய வரைதல், வாசித்தல் அடையாளமிடல் (சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.) இச் செயன்முறைப் பரீட்சை 06 மணித்தியாலங்களைக் கொண்டதாகும்.)

9. **விண்ணப்பிக்கும் முறை**.- (i) விண்ணப்பங்கள் கீழே காட்டப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய A4 அளவு தாளினை உபயோகித்து தயாரிக்கப்பட்டு 2007.07.27 ஆந் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் "தேசிய சுவடிகள் பணிப்பாளர், தேசிய சுவடிகள் திணைக்களம், இல. 07, றீட் அவனியூ, கொழும்பு 7" எனும் முகவரிக்கு வந்தடையும் வண்ணம் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்களை தாங்கி வருகின்ற கடித உறைகளின் இடப்பக்க மேல் மூலையில் "தச்சுத் தொழிலாளர் பதவிக்கு (வகுப்பு II) ஆட்சேர்த்தல்" எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பக்காரர்கள் தமது விண்ணப்பங்களினை நிறுவனத் தலைவரினூடாக அனுப்புதல் வேண்டும்.)

(ii) விண்ணப்பகாரரின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலையின் அதிபர் அல்லது சமாதான நீதவான் அல்லது சமயத் தலத்தின் பிரதான மதகுருமார் அல்லது சட்டத்தரணி அல்லது ஆண்டொன்றுக்கு ரூபா 94,080 இற்குக் குறையாமல் சம்பளம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(iii) விபரங்கள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அத்துடன் அவை ஏற்றுக் கொள்ளப்பட்டமை பற்றியோ அல்லது நிராகரிக்கப்பட்டமை பற்றியோ விண்ணப்பகாரருக்கு அறிவிக்கப்படமாட்டாது.

(iv) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். இறுதித் திகதி 2007.07.27 ஆகும்.

10. **உண்மையான தகவல்களை வழங்குதல் :**

(i) விண்ணப்பகாரர் தேவையான தகைமைகளினைக் கொண்டிருக்கவில்லை என்று நியமனத்தின் முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எந்த நேரத்திலும் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பகாரர் பிழையான தகவல்களைக் கொடுத்தார் அல்லது தகவல்களை மறைத்தார் என தெரிவின் பின்னர் தெரியவந்தால் எந்தவித நட்டஈடும் இன்றி சேவையிலிருந்து நீக்கப்படுவார்.
(ii) விண்ணப்பங்கள் கோரப்படுவதற்காக அறிவித்தலுடன் தொடர்புபட்ட விடயங்கள் குறித்தும் இந்த அறிவித்தல் மூலம் வெளிப்படுத்தப்படாத ஏனைய விடயங்கள் குறித்தும் தேசிய சுவடிகள் பணிப்பாளரின் தீர்மானம் இறுதியானதாகும்.

கலாநிதி சரோஜா வெத்தசிங்ஹ,
தேசிய சுவடிகள் பணிப்பாளர்.

தேசிய சுவடிகள் திணைக்களம்,
இல. 07, றீட் அவெனியூ,
கொழும்பு 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தேசிய சுவடிகள் திணைக்களம்**

தச்சுத் தொழிலாளர் பதவி (வகுப்பு II)

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
2. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் :-----.
3. தனிப்பட்ட முகவரி :-----.
4. அலுவலக முகவரி :-----.
5. தற்போதைய வதிவிட முகவரியும் மாவட்டமும் :-----.
6. (i) பிறந்த திகதி :-
வருடம் :-----, மாதம் :-----, திகதி :-----.
(ii) விண்ணப்ப முடிவு திகதியன்று வயது :-
வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.
7. பிறந்த இடம் :-----.
நீர் இலங்கைப் பிரசையா ? :-----.
8. பால் :-----.
9. நீர் திருமணமானவரா ? :-----.
10. (i) கல்வித் தகைமைகள் :-----.
(ii) தொழிற்றுறைத் தகைமைகள் :-----.

| நிறுவகத்தின் பெயர் | காலவரையறை இருந்து ..... வரை | பின்பற்றிய பாடநெறியும் சித்தியடைந்த மட்டமும் |
|---|---|---|
| | | |

11. நீர் இதற்கு முன்னர் ஏதாவது திணைக்களத்தில் அல்லது அரசாங்கக் கூட்டுத்தாபனத்தில் சேவையாற்றிருப்பின் அந்த சேவையிலிருந்து விலகுவதற்கான காரணத்தைத் தருக.
12. நீர் நீதிமன்றச் சட்டம் ஒன்றின் மூலம் குற்றவியல் தவறுக்காக குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின் அல்லது குற்றவாளி எனக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பின் தவறின் தன்மையையும் கொடுக்கப்பட்ட தண்டனையின் விபரத்தினையும் தருக.
13. ஏனைய குறிப்புரைகள் :
என்னால் இந்த விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன். இதில் அடங்கியுள்ள ஏதாவது விபரம் பிழையானது அல்லது தவறானது என்று தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தகைமை நீக்கம் செய்யப்படுவேன் என்றும் நியமனத்தின் பின்னர் அறியப்பட்டால் எனது நியமனம் இரத்துச் செய்யப்படும் என்பதையும் நானறிவேன்.

-----,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :-----.

14. **விண்ணப்பகாரரின் கையொப்பத்தினை உறுதிப்படுத்துதல்:-**
எனக்கு திரு./திருமதி / செல்வி .............. என்பவரை மிகவும் நன்கு தெரியும் என்றும் அவர் என் முன்னிலையிலேயே தனது கையொபபத்தினை இட்டார் என்றும் இத்தால் சான்றுப் படுத்துகின்றேன்.

-----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவி முத்திரை :-----.
முகவரி :-----.
திகதி :-----.

15. **அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பகாரர் எனின், திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**
நான் திரு./ திருமதி / செல்வி ..................... என்பவரின் விண்ணபத்தினை சமர்ப்பிக்கின்றேன். இவர் இந்த திணைக்களத்தில்/ நிறுவனத்தில் நிரந்தர / தற்காலிக/ அமய நிலையில் சேவையாற்றுகிறார் என்றும் இவர் இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ விடுவிக்க முடியாது என்றும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரின்
கையொப்பமும் பதவி முத்திரையும்.

நிறுவகம் :-----.
திகதி :-----.
7-48/ 2

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி வெற்றிடம் தொடர்பாக விண்ணப்பம் கோரும் அறிவித்தலை இரத்து செய்தல்

**கண்டி மாவட்டம்**

என்னால் பிரசுரிக்கப்பட்ட கண்டி மாவட்டத்தின் கீழ்க் குறிப்பிடப்பட்ட பிரிவுகளின் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர் பதவி தொடர்பான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பம் கோரலை புதிய ஆட்சேர்ப்பு முறையை நடைமுறைப்படுத்துவதற்காக இத்தால் இரத்துச் செய்கிறேன்.

எல். கே. ரத்னசிறி,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 280, பிரதான வீதி,
கொழும்பு 11,
2007.06.07

அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்பட்ட பிரிவும் பதவியும் | விண்ணப்பம் கோரப்பட்ட வர்த்தமானியின் இலக்கமும் திகதியும் |
|---|---|---|---|
| கண்டி | உடபலாத | உடபலாத பிரிவின் துனுகேஉல்ல பிரதேச மேலதிக விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | 1451 ஆம் இலக்க 2006.06.23 ஆந் திகதி |
| கண்டி | கடவத்சதற மற்றும் கங்கவட்ட கோறளை | கங்கவட்ட கோறளை பிரிவின் கற்றம்பே பிரதேச மேலதிக விவாக (கண்டிய/ பொது)பதிவாளர் பதவி | 1451 ஆம் இலக்க 2006.06.23 ஆந் திகதி |
| கண்டி | பன்வில | பாணதும்பற பிரிவின் பன்வில பிரதேச மேலதிக விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | 1451 ஆம் இலக்க 2006.06.23 ஆந் திகதி |
| கண்டி | தும்பனே | தும்பனே கங்அட்ட பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் தும்பனே பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | 1451 ஆம் இலக்க 2006.06.23 ஆந் திகதி |
| கண்டி | யடிநுவர | உடுநுவர மற்றும் யடிநுவர பிரிவின் மேலதிக விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | 1451 ஆம் இலக்க 2006.06.23 ஆந் திகதி |
| கண்டி | உடபலாத | கம்பளை நகர பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | 1450 ஆம் இலக்க 2006.06.16 ஆந் திகதி |
| கண்டி | உடபலாத | கம்பளை ஆடியா கடவத்தை பிரதேச முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | 1450 ஆம் இலக்க 2006.06.16 ஆந் திகதி |
| கண்டி | யடிநுவர | உடுநுவர மற்றும் யடிநுவர பிரிவில் தெகியங்க முறதலாவ பிரதேச முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | 1450 ஆம் இலக்க 2006.06.16 ஆந் திகதி |
| கண்டி | கடவத்சதற மற்றும் கங்கவட்ட கோறளை | கங்கவட்ட கோறளை பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கண்டி பிரதேச மேலதிக விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | 1400 ஆம் இலக்க 2005.07.01 ஆந் திகதி |
| கண்டி | பஸ்பாகே கோறளை | நாவலப்பிட்டி நகர வைத்திய பதிவாளர் பதவி | 1400 ஆம் இலக்க 2005.07.01 ஆந் திகதி |
| கண்டி | கங்க இகல கோறளை | உடபலாத பிரிவின் உலபனே பிரதேச முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | 1398 ஆம் இலக்க 2005.06.17 ஆந் திகதி |
| கண்டி | உடுநுவர | உடுநுவர மற்றும் யடிநுவர பிரிவில் மீவலதெனிய பிரதேச முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | 1398 ஆம் இலக்க 2005.06.17 ஆந் திகதி |

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்பட்ட பிரிவும் பதவியும் | விண்ணப்பம் கோரப்பட்ட வர்த்தமானியின் இலக்கமும் திகதியும் |
|---|---|---|---|
| கண்டி | உடுநுவர | உடுநுவர மற்றும் யடிநுவர பிரிவில் பேனியாகொட பிரதேச முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | 1398 ஆம் இலக்க 2005.06.17 ஆந் திகதி |
| கண்டி | கடவத்சதற மற்றும் | கடவத்சதற மற்றும் கங்கவட்ட கோறளை கங்கவட்ட கோறளை பிரிவின் யடிநுவர பிரதேச மேலதிக விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | 1370 ஆம் இலக்க 2004.12.03 ஆந் திகதி |
| கண்டி | பாதகேவாகட்ட | மாறஸ்ஸன பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் பாதகேவாகட்ட பிரதேச மேலதிக விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | 1328 ஆம் இலக்க 2004.02.13 ஆந் திகதி |
| கண்டி | பாதகேவாகட்ட | பாதகேவாகட்ட பிரிவின் பிச்சமல்வத்த பிரதேச மேலதிக விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | 1328 ஆம் இலக்க 2004.02.13 ஆந் திகதி |
| கண்டி | ஹாரிஸ்பத்துவ | ஹாரிஸ்பத்து பிரிவின் கிங்குல்வல பிரதேச மேலதிக விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | 1328 ஆம் இலக்க 2004.02.13 ஆந் திகதி |
| கண்டி | பூஜாபிடிய | ஊடகம்பக இல. 1 பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் ஹரிஸ்பத்துவ பிரதேச மேலதிக விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | 1328 ஆம் இலக்க 2004.02.13 ஆந் திகதி |
| கண்டி | கடவத்சதற மற்றும் கங்கவட்ட கோறளை | கண்டி நகர இறப்பு, பிறப்பு வைத்திய பதிவாளர் பதவி | 1307 ஆம் இலக்க 2003.09.19 ஆந் திகதி |
| கண்டி | பூஜாபிடிய | ஹாரிஸ்பத்து பிரிவின் கள்கின்ன பிரதேச முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | 1241 ஆம் இலக்க 2002.06.14 ஆந் திகதி |
| கண்டி | பாதகேவாகட்ட | பாதகேவாகட்ட பிரிவின் உடதெனிய பிரதேச முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | 1241 ஆம் இலக்க 2002.06.14 ஆந் திகதி |
| கண்டி | பூஜாபிடிய | ஹாரிஸ்பத்து பிரிவின் புளுகோகதன்ன பிரதேச முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | 1241 ஆம் இலக்க 2002.06.14 ஆந் திகதி |
| கண்டி | மினிபே | கந்தபகல தகுண பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் உடுதும்பற பிரதேச விவாக (கண்டிய/பொது) | 1235 ஆம் இலக்க 2002.05.03 ஆந் திகதி பதிவாளர் பதவி |
| கண்டி | உடுநுவர | உடுநுவர கந்தபலாத பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் உடுநுவர யடிநுவர பிரதேச விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | 1235 ஆம் இலக்க 2002.05.03 ஆந் திகதி |
| கண்டி | ஹாரிஸ்பத்துவ | புள்ளேகம்பக தெற்கு (இல. 1) பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் ஹாரிஸ்பத்துவ பிரதேச விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | 1235 ஆம் இலக்க 2002.05.03 ஆந் திகதி |
| கண்டி | பானதும்பர | பானதும்பர பள்ளேகம்பக மேற்கு இறப்பு மற்றும் பானதும்பர பிரதேச விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | 1235 ஆம் இலக்க 2002.05.03 ஆந் திகதி |

7-63

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் வலுவூட்டல் அமைச்சு

மகளிர் அபிவிருத்தி அதிகாரிகளுக்கான முதலாவது வினைத்திறன் காண் பரீட்சை - 2007

சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் மகளிர் அபிவிருத்தி அதிகாரிகளுக்கான முதலாவது வினைத்திறன்காண் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2007, ஒற்றோபர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும். இப்பரீட்சைக்குரிய விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2007, யூலை மாதம் 20 ஆந் திகதி என இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது.

2. **பரீட்சை விதிகள்.**- இவ் வினைத்திறன்காண் பரீட்சை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களைக் கொண்டிருக்கும் :-

| | | |
|---|---|---|
| பாட இலக்கம் 1: | நிதிப்பிரமாணங்கள்-அலுவலக நடைமுறைகள் | காலம் : 2 மணி - 100 புள்ளிகள் |
| பாட இலக்கம் 2: | பால்நிலை மற்றும் பெண்ணுரிமைகள் | காலம் : 2 மணி - 100 புள்ளிகள் |
| பாட இலக்கம் 3: | சமூக விஞ்ஞானம் மற்றும் உளவியல் ஆலோசனை சேவை | காலம் : 2 மணி - 100 புள்ளிகள் |

**குறிப்பு**.- (அ) சகல பாடங்களுக்கும் ஒரே தடவையில் அல்லது வெவ்வேறு தடவைகளில் தோற்றுவதற்கு அதிகாரிகளுக்கு அனுமதியுண்டு.

(ஆ) சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 40% அல்லது அதற்கு மேல் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

3. **பாடங்கள் :**

(i) *நிதிப் பிரமாணங்கள் - அலுவலக நடைமுறைகள்*
- இலங்கையின் அரச முகாமைத்துவ அமைப்பு
- நிதிக் கட்டுப்பாடு மற்றும் வருடாந்த மதிப்பீடு
- தாபனக் கோவையின் கட்டளைகள் மற்றும் நிதிப் பிரமாணங்கள்
- தாபன விதிக் கோவையின் பின்வரும் அத்தியாயங்கள் சேர்த்துக்கொள்ளப்படும் :
  I, II, IV, V, VII, IX, XII, XV, XXIII, XXVI, XXVII, XXX, XXXI, XXXII, XXXIII
  அரசின் நிதிப் பிரமாணங்களில் 1 ஆம் பகுதி (X ஆவது அத்தியாயம் தவிர்ந்த)
- அலுவலக முகாமைத்துவம்

(ii) *பால்நிலை மற்றும் பெண்ணுரிமைகள் :*
- பெண்களுக்கு எதிரான பேதங்காட்டல்
- இலங்கை சமுகத்தில் பால்நிலை
- இலங்கை பெண்கள் பிரகடனம் மற்றும் பெண்ணுரிமைகள்

(iii) *சமூக விஞ்ஞானம் மற்றும் உளவியல் ஆலோசனை சேவை:*
- கிராமிய சமூக விஞ்ஞானம்
- இலங்கையின் நகரமயப்படுத்தல்
- உழைப்பு அபிவிருத்தி
- உளவியல் ஆலோசனை சேவையின் அடிப்படை இலட்சணங்கள் மற்றும் ஒழுக்க விதிகள்
- பெண் மற்றும் உளவியல் அநீதிகள்
- இலங்கையின் ஆலோசனை சேவை மற்றும் ஆலோசனை சேவைச் சந்தர்ப்பங்கள்

4. இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாதிரி விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் அச்சிடப்பட்டுள்ளது. அம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப பரீட்சார்த்திகள் தங்களது விண்ணப்பப்படிவத்தை தயார்செய்து கொள்ளவேண்டும். விண்ணப்பப்படிவத்தை A4 அளவைக் கொண்ட தாளில் தயார்செய்து கொள்ளவேண்டும். இல. 1 இலிருந்து இல. 6 வரை முதலாம் பக்கத்திலும் மற்றவைகள் இரண்டாம் பக்கத்திலும் அமையுமாறு தயாரித்துக்கொள்ள வேண்டும். அதைப் பரீட்சார்த்தி தனது சொந்த கையெழுத்தினால் பூர்த்தி செய்ய வேண்டும்.

5. விண்ணப்பப்படிவத்தைத் தன்னுடைய திணைக்களத் தலைவர் ஊடாக (பிரதேச செயலாளர் காரியாலயமாயின் பிரதேச செயலாளர் மூலமாக) 2007 யூலை மாதம் 20 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்பு "பத்தரமுல்லை, பெலவத்த, அமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சை பிரிவு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பரீட்சை ஆணையாளர் நாயகம்" அவர்களுக்குப் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவத்தைக் கொண்டுள்ள உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பரீட்சையின் பெயர்" குறிப்பிடப்பட வேண்டும். பரீட்சையின் விண்ணப்பப்படிவத்தை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் அல்லது பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

அரச மொழிக் கொள்கைக்கேற்ப புதிதாகச் சேர்த்துக் கொள்ளப் பட்ட அதிகாரிகள் தங்களுடைய விண்ணப்பப்படிவத்தை அரச மொழியில் அல்லது தான் சேர்த்துக்கொள்ளப்பட்ட மொழிக்கேற்ப தமிழ்/ஆங்கில மொழிகளில் தயாரித்துச் சமர்ப்பிக்க வேண்டும்.

6. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சையின் நேரசூசி பிரதியொன்றுடன் அனுமதி அட்டையொன்றும் வழங்கப்படும். அத்துடன் பரீட்சை நடைபெறும் தினத்தைக் குறிப்பிடும் அறிவித்தலொன்றும் பிரசுரிக்கப்படும். பரீட்சார்த்தி ஒருவருக்கு ஆகக் குறைந்தது பரீட்சை நடைபெறுவதற்கு நான்கு நாளைக்கு முன்பு அனுமதி அட்டையொன்று கிடைக்காவிட்டால் அதைப்பற்றி பின்வரும் விபரங்களுடன் "பத்தரமுல்லை, பெலவத்தை, அமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைப் பிரிவு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பரீட்சை ஆணையாளர் நாயகம்" அவர்களுக்கு (*தந்தி முகவரி :* பரீட்சை, பத்தரமுல்லை) தாமதமின்றி எழுத்தில் அறிவிக்க வேண்டும் :

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் ;
(iii) முகவரி ;
(iv) விண்ணப்பப்படிவத்தைத் தபால் செய்த தபால் அலுவலகம், பதிவு இலக்கம் மற்றும் திகதி.

7. **ஆளடையாளம்.**- பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தினுள் தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை அதிகாரிக்கு தன்னுடைய ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்குப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ii) கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களிலொன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளின் அபேட்சகத்தன்மையை இரத்துச் செய்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரமுண்டு.

8. **பரீட்சைக் கட்டணம்.**- இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து பின்வரும் அடிப்படையில் கட்டணம் அறவிடப்படும்.

| | *பரீட்சைக் கட்டணம்* | *ரூபா சதம்* |
|---|---|---|
| (அ) | முதல் தடவைக்கு கட்டணம் அறவிடப் படமாட்டாது | |
| (ஆ) | முதல் தடவையின் பின்னர் முழுப் பரீட்சைக்கும் | 115.00 |
| (இ) | ஒவ்வொரு பாடத்திற்கும் | 75.00 |

பரீட்சார்த்தியினால் கையொப்பமிட்டு உரிய முறையில் இரத்துச் செய்யப்பட்ட முத்திரை மூலம் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

9. இப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதோடு, அவரால் பரீட்சை நடாத்துவது சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் சட்டதிட்டங்களுக்குப் பரீட்சார்த்திகள் உட்படுத்தப்படுவார்கள்.

10. இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுள்ள மற்றும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டையொன்று வழங்கப்பட்டுள்ள தங்களுடைய திணைக்கள/ அலுவலக ஊழியர்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு திணைக்கள/ அலுவலக தலைவர்கள் கடமை விடுமுறை வழங்க வேண்டும்.

11. இப்பிரமாணங்களில் காட்டப்படாத ஏதாவது விடயங்கள் இருப்பின் சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் விருப்பத்திற்கேற்ப அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

செயலாளர்,
சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் வலுவூட்டல் அமைச்சு.

சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் வலுவூட்டல் அமைச்சு,
இல. 177, நாவல வீதி,
நாரஹேன்பிட்டிய,
2007...........

---

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் மகளிர் அபிவிருத்தி அதிகாரிகளுக்கான முதலாவது வினைத்திறன் காண் பரீட்சை - 2006**

First Efficiency Bar Examination - 2006 for Women Development Officers of Ministry of Child Development and Women's Empowerment

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

1. பெயர் :-----.
   1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
   முதலெழுத்துக்கள் இறுதியில் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :
   (உதா. : SILVA, A. B.
   1.2 முதலெழுத்துக்களில் அறியும் பெயர்கள் :-----.
   (சிங்களத்தில்/ தமிழில்)
   1.3 தேசிய அடையாள அட்டை இல. :-
2. அலுவலக முகவரி :-----.
   (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)
   2.1 அலுவலக முகவரி :-----.
   (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)
   2.2 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி :-----.
   (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)
3. பால் :-
   3.1 பெண் - 1 ஆண் - 0
   (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)
   3.2 திருமணமானவரா? :-
   திருமணமானவர் - 1
   திருமணமாகாதவர் - 2
   (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)
   3.3 பிறந்த திகதி :-
   ஆண்டு : மாதம் : திகதி :
   3.4 விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது :-
   வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :
4. சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் மகளிர் அபிவிருத்தி அதிகாரி பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி : -----.
   (கடமையைப் பொறுப்பேற்ற உரிய திகதியைக் குறிப்பிடுக)
5. அரச மொழிக் கொள்கையின் குறிக்கோள்களுக்கேற்ப முன்னர் சேர்த்துக்கொள்ளப்பட்டவரா ? அல்லது புதிதாய்ச் சேர்த்துக் கொள்ளப்பட்டவரா? :-----.
6. திணைக்களத்தின் பெயர் (பிரதேச செயலாளர் அலுவலகமாயின் அவ்வலுவலகத்தின் பெயர்) :-----.
7. வர்த்தமானி அறிவித்தலின் 2 ஆம் பந்தியின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள பாடங்கள் மற்றும் பாட இலக்கங்கள் :-----.

| பாடங்கள் | பாட இல. |
|---|---|
| 1. :-----. | |
| 2. :-----. | |
| 3. :-----. | |

8. பரீட்சைக்குத் தோன்றுவது முதன்முறையா ? :-----.
9. மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சரியானவை எனவும், மேற் காட்டியுள்ள மொழியில் பரீட்சைக்குத் தோற்ற எனக்கு உரிமை உண்டு என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

..................................................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :-----.

**குறிப்பு**.- தன்னுடைய திணைக்களத் தலைவரின் அல்லது திணைக்களத் தலைவருக்குப் பதிலாக கையொப்பமிட அதிகாரம் பெற்றுள்ள அதிகாரியின்/ தன்னுடைய பிரதேச தலைவரின் முன்னிலையில் விண்ணப்பதாரி கையொப்பமிட வேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

என்னுடைய அலுவலகத்தில் அதிகாரியாய் உள்ளவரும், நான் தனிப்பட்ட முறையில் அறிந்துள்ளவருமான செல்வி/ திருமதி ....................................................... ஆந் திகதியன்று எனது முன்னிலையில் கையொப்பமிட்டாரென உறுதிப்படுத்துகின்றேன்.

........................................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(i) மேலே வழங்கப்பட்டுள்ள விபரங்களைச் சோதித்துப் பார்த்தேன் எனவும், அவைகள் பிழையற்றன எனவும் ;
(ii) விண்ணப்பதாரி இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுள்ளவர் எனவும்

சான்றுரைக்கிறேன்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பதவிப் பெயர் :-----.
திகதி :-----.
7-46

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### இலங்கைப் புகையிரத சேவைகள்

இலங்கைப் புகையிரதப் பகுதிக்கு இறக்குமதி செய்யும் பொருட்களைப் பரிசோதிப்பதற்கான பரிசோதகர்களை நியமித்தல்

தலைவர், திணைக்கள கொள்வனவுச் சபை (சிறியது), இலங்கைப் புகையிரத சேவைகள், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கையில் சரக்குகளைப் பரிசோதனை செய்யும் பிரபலம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து, இலங்கைப் புகையிரதப் பகுதிக்கு இறக்குமதி செய்யும் பொருட்களைப் பரிசோதிப்பதற்கான பரிசோதகர்களை நியமிப்பதற்கான சீலிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப் படுகின்றன.

2. மீளப்பெறப்பட முடியாத கேள்விப்பணமாக ரூபா 2,500 ஐ அல்லது அதற்குச் சமமான இலகுவாக மாற்றீடு செய்யக்கூடிய தொகையைச் செலுத்துவதன் மூலம் புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர் காரியாலயம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களிலிருந்து 2007.08.22 பிற்பகல் 3.00 மணிவரை (இலங்கை நேரம்) பெறப்படும் கேள்விப் பத்திரங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3. கேள்விகள் 2007.08.24 பிற்பகல் 2.00 மணிக்கு (இலங்கை நேரம்) மூடப்படும்.

4. இலங்கைப் புகையிரத தலைமையகம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கையில் கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும். கேள்வி ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் கேள்விகள் திறக்கப்படும்போது சமூகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. சீலிடப்பட்ட கேள்விகளை பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளிப்பதன் மூலமாகவோ பின்வரும் முகவரியிற் சமர்ப்பிக்கலாம்:-

தலைவர்,
திணைக்கள கொள்வனவுச் சபை (சிறியது),
இலங்கைப் புகையிரத சேவைகள்,
புகையிரதத் தலைமையகம்,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10, இலங்கை.

6. கேள்விப் பத்திர ஆவணங்களை எந்தவித கட்டணங்களுமின்றி புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர் காரியாலயம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கையில் பரிசீலிக்கலாம். மேலதிக விபரங்களுக்குத் தயவுசெய்து பின்வரும் முகவரியிற் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
திணைக்கள கொள்வனவுச் சபை (சிறியது),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

தொடர்பு இலக்கம் : எஸ். ஆர். எஸ்./எவ். 6580
புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர்,
புகையிரதக் களஞ்சியத் திணைக்களம்,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.

தொலைபேசி இலக்கங்கள் : 94(11)2432044 அல்லது 94(11)2436818

7-113

## பொருட்கள் விற்பனவும் பிறவும்

### இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு

இவ்வாணைக்குழுவின் பாவித்தலின் பின் அகற்றப்பட்ட பொருட்கள் ஏலவிற்பனையில் விற்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1. ஏலத்தில் விற்பதற்கான பொருட்பட்டியல் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. இப்பொருட்கள் 2007.07.26 ஆந் திகதி 10.00 மணியில் இருந்து 03.00 மணி வரை ஆணைக்குழு அலுவலக பூமியில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

3. 2007.07.27 ஆந் திகதி 10.00 மணிக்கு பொருட்கள் ஏல விற்பனை ஆரம்பமாகும் பொருட்களை வாங்குபவர்கள் அன்றைய தினமே பணம் செலுத்தி வாங்கிய பொருட்களை ஆணைக்குழு அலுவலகத்தில் இருந்து அகற்றிக்கொள்ளல் வேண்டும்.

**ஏலவிற்பனை செய்யும் பொருட்பட்டியல்**

| பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|
| 1. ஹெவிடியூட்டி கோவைக்கட்டு யந்திரம் | 01 |
| 2. சாதாரணமான கோவைக்கட்டு யந்திரம் | 10 |
| 3. தொலைபேசி தோல் போர்த்தி | 01 |
| 4. லோக பூட்டுக்கள் (3/4, 1 1/2, 2 1/4, 2 1/2) | 07 |
| 5. வாகனங்களை இழுக்கும் கேபல் | 01 |
| 6. கணக்குக் கூட்டும் மெஷின் | 12 |
| 7. போட்டோ பிரதி மெஷின் (சாப் நபுவாரெக்) | 02 |
| 8. பஞ்சர் | 04 |
| 9. கைத்தொலைபேசி (நொகிய, அல்கரெல்) | 07 |
| 10. பைசிக்கிள் (லுமாலா) | 01 |
| 11. கோவைத் தட்டு | 06 |
| 12. ரயர் 13, 15, 16 அளவு | 63 |
| 14 அளவு | 30 |
| 13. வாகன உதிரிப்பாகங்கள் | கி.கி. 200 |
| 14. காற்றாட்டி மெஷின் | 03 |
| 15. மின் விளக்கு | 02 |
| 16. மின் காற்று வீசி (சிவர்) | 01 |
| மின் காற்று கூரை | 24 |
| மின் காற்று நிற்பாட்டி | 06 |
| 17. மின்கேத்தல் | 07 |
| 18. உயர் அதிகாரி பை | 10 |
| 19. பெண் பை | 02 |
| 20. 3 அறை கொண்ட பை | 06 |
| 21. கம்பியூட்டர் அச்சு யந்திரம் (நெக்) | 01 |
| 22. திரைச்சீலை | 85 |
| 23. மர அலுமாரி (முற்பக்கம் கண்ணாடி) | 01 |
| 24. சுவர் மணிக்கூடு | 01 |
| 25. கூடை | 04 |
| 26. யகற் | 01 |
| 27. றோணியோ கடதாசி பக்கற்றுகள் | 07 |
| 28. பென்சில் (நீலம் சிவப்பு) | 305 |
| 29. ரோனர் (சாப் நபுவாரெக்) | 03 |
| 30. கறுப்பு நயிலொன் றிபன் (நெக்) | 03 |
| 31. கைத்தொலைபேசி சார்ஜர் | 04 |
| 32. கம்பியூட்டர் மவுஸ் | 04 |
| 33. ஹெலமட் | 05 |
| 34. I.B.M. கம்பியூட்டர் சீபொட் | 01 |
| 35. அழைப்பு மணி | 01 |
| 36. பூங்கா விளக்கு (இலாம்பு) | 16 |
| 37. மரப்பெட்டி | 02 |
| 38. யன்னல் (கதவு) | 02 |
| 39. கதவு | 01 |
| 40. கொமட் (சிஸ்டனுடன்) | 07 |
| 41. கம்பியூட்டர் (CPU) | 01 |
| 42. தட்டச்சு மின்சாரம் | 01 |
| தட்டச்சு சிங்களம் | 03 |
| தட்டச்சு ஆங்கிலம் | 04 |
| 43. சீப்போட் | 04 |
| 44. கம்பியூட்டர் (உதிரிப்பாகத்துடன்) | 01 |
| 45. திடீர் அழைப்பு விளக்கு | 01 |
| 46. குளிரூட்டியந்திரம் | 01 |
| 47. கதிரை (இரும்பு குஷன்) | 01 |
| 48. கதிரை (இரும்பு சாதாரணம்) | 05 |
| 49. மரக்கதிரை (குஷன்) | 01 |
| 50. சாதாரணக் கதிரை | 03 |
| 51. கைக் கதிரை | 21 |
| 52. தட்டச்சு கதிரை | 04 |
| 53. மேசை (லிகிதர்) | 09 |
| 54. மேசை பெரிது | 02 |
| 55. இரும்பு அலுமாரி (லாச்சு 4) | 02 |
| 56. இரும்பு அலுமாரி (லாச்சு 2) | 01 |
| 57. அலுமீனியம் துண்டு | கி.கி. 05 |
| 58. மரத்துண்டு | கி.கி. 50 |
| 59. வேன் சீட் | 08 |
| 60. மோட்டார் சைக்கிள் 142- இலக்கம் (சுசுக்கி G.S.125) | 02 |

பியசேன ரணசிங்க,
இயக்குநர் நாயகம்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதலைப்
புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அலுவலகம்,
36, மலலசேகர மாவத்தை,
கொழும்பு 7,
2007.06.19.
7-101

## உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

### பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கக் கம்பனிச் சட்டத்தின் 9 ஆம் பிரிவு அடிப் படையில் இவ்வறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது :

*கம்பனியின் பெயர் :* எக்ஸ்பெரிமென்ட்ஸ் (பிரைவட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம் :* 2007.05.29 ஆந் திகதிய PV 60096
*பதிவு செய்யப்பட்ட கம்பனியின் முகவரி :* இல. 45, பிரேப்புறூக் வீதி, கொழும்பு 2.

பிசினஸ் மேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 45, பிறேபுறூக் வீதி,
கொழும்பு 2,
2007, யூன் 6.
7-49/ 1

### பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கக் கம்பனிச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் அடிப் படையில் இவ்வறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது :

*கம்பனியின் பெயர் :* ஜே. டி. எசோசியேட்ஸ் (பிரைவட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம் :* 2007.06.05 ஆந் திகதிய PV 60138
*பதிவு செய்யப்பட்ட கம்பனியின் முகவரி :* கல்கடே சந்தி, அளுத்கம, பண்டாரகம.

பிசினஸ் மேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 45, பிறேபுறூக் வீதி,
கொழும்பு 2,
2007, யூன் 6.
7-49/ 2

### பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கக் கம்பனிச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் அடிப் படையில் இவ்வறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

*கம்பனியின் பெயர் :* மந்தாகினி கிரியேஷன்ஸ் (பிரைவட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம் :* 2007.06.06 ஆந் திகதிய PV 60174
*பதிவு செய்யப்பட்ட கம்பனியின் முகவரி :* இல. 830, ரோஹின மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை.

பிசினஸ் மேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 45, பிறேபுறூக் வீதி,
கொழும்பு 2,
2007, யூன் 7.
7-49/ 3

### அட்டோர்னி தத்துவத்தை இரத்துச் செய்தல்

No. 36, Swanage Waye Hayes Middlesex UB 4 ONY United Kingdom என்ற முகவரியிலிருந்து தற்போது குருநாகல், கண்டி வீதியில் இலக்கம் 331/6 என்ற இல்லத்தில் வசித்து வரும் மொஹமட் காஸிம் மொஹமட் நஸீர் (ID No. 57041346V) ஆகிய நான், மாத்தளை, குமார வீதி, இலக்கம் 39 என்ற முகவரியில் வசிக்கும் மொஹமட் ஹாஸிம் மொஹமட் அபூபக்கர் (I. D. No. 551014410V) என்பவருக்கு No. 12, Old Square Lincoln's inn London WC 2 A 3 TX என்ற முகவரியிலிருக்கும் சட்டத்தரணி F.C.S. கோதாகொட என்பவரால் 2002.05.10 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்டு அட்டோர்னி தத்துவ புத்தகத்தின் 237 பிரிவில் 165 ஆம் பக்கத்தில் தினக்குறிப்பு 4557 இலக்கத்தின்கீழ் 2002.05.23 ஆந் திகதி பதிவுசெய்து வழங்கப்பட்ட அட்டோர்னி தத்துவத்தை இன்று முதல் இரத்துச் செய்து செல்லுபடியாகாததாக ஆக்கியிருப்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறேன்.

மொஹமட் காஸிம் மொஹமட் நஸீர்.

7-50

### 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டம்

9 (1) ஆம் பிரிவின்கீழான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் 2 007, மே 21 ஆந் தேதியன்று பின்வரும் கம்பனி கூட்டிணைக்

கப்பட்டதென இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது :

1. கம்பனியின் பெயர் : ரிலயன்ஸ் அசோசியேட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

2. கம்பனியின் இலக்கம் : பீவீ 60025

3. பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி : இல. 9, அப்பொன்சு மாவத்தை, லக்சபத்திய, மொறட்டுவ.

செயலாளர்,
ரிலாயன்ஸ் அசோசியேட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.
(பீவீ 60025)

7-85

## நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்

(107 ஆம் அத்தியாயம்)

யாழ்ப்பாணம் பிரதான வீதி, இல. 134 (276) ஐச் சேர்ந்த சிவலிங்கம் இளங்கீரன் ஆகிய நான், தமிழ் மொழியில் நொத்தாரிசு ஆவதற்கு, இறுதிப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குரிய ஆயத்தங்கள் அனைத்தையும் செய்துள்ளேன் என்பதை நொத்தாரிசுமார் கட்டளைச் சட்டம் (107 ஆம் அத்தியாயம்) 7 ஆம் பிரிவு 'ஆ' பகுதிக்கமைவாக இவ் அறிவித்தலை வெளியிடுகின்றேன்.

சி. இளங்கீரன்.

134 (276), பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
7-91

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டம்

கீழே குறிப்பிடப்பட்ட கம்பனிகள் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் நியதிகளின்படி கூட்டிணைக்கப்பட்டுள்ளன என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

| கம்பனியின் பெயர் | பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி | கூட்டிணைப்பு இல. |
|---|---|---|
| ஓஷான் மேர்க்கன்ரைல் (பிறைவேட்) லிமிட்டெட் | 8ஏ, டீல் பிளேஸ், கொழும்பு 3. | PV 60234 |
| விண்டி மேர்க்கன்ரைல் (பிறைவேட்) லிமிட்டெட் | 8, டீல் பிளேஸ், கொழும்பு 3. | PV 60228 |
| ஹன்ஸி மேர்க்கன்ரைல் (பிறைவேட்) லிமிட்டெட் | இல. 188, பஹாலவெல வீதி, தலங்கம தெற்கு | PV 60233 |

கிறைறீரியா மனேஜ்மன்ட் (பிறைவேட்) லிமிட்டெ,
செயலாளர்கள்.

2007, யூன் 19.
7-92

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைப்புக்கான பொது அறிவித்தல்

நேச்சர் சொலூஷன்ஸ் ப்றொவைடர்ஸ் (பிரை) லிமிட்டெட் 2007, மே 28 ஆந் திகதி கூட்டமைப்பாக்கப்பட்டது.

2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டவிதி இல. 7 இன் (1) பிரிவிற்கேற்ப பொது அறிவித்தலில் கம்பனியின் பெயர், இலக்கம் மற்றும் கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி விபரங்கள் தரப்பட்டுள்ளன.

பெயர் (கம்பனியின்) : நேச்சர் சொலூஷன்ஸ் ப்றொவைடர்ஸ் (பிரை) லிமிட்டெட்

கம்பனி இல. : PV 60075

கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 94, உடுப்பில, தெல்கொட

நேச்சர் சொலூஷன்ஸ் ப்றொவைடர்ஸ் (பிரை) லிமிட்டெட்,
2007, யூன் 6.

7-137

# ஏல விற்பனைகள்

## றுஹுன அபிவிருத்தி வங்கி - கெகனதுர கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் கடன்களை மீள அறவிடும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 4 இன் கீழான ஏல விற்பனை

**சொத்துக்கள் ஏல விற்பனை**

றுஹுன அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி இங்கு கீழ் கண்ட சொத்துக்கள் 2007.08.02 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு இச்சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும்.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்.**- தென் மாகாணத்தில் மாத்தறை மாவட்டத்திலே மாத்தறை கடவத் சதரைக்குள் நாவிமன தெற்கு இல் அமைந்துள்ள கெதரவத்த அல்லது பெலகெடியவத்த அல்லது கபடகேவத்த என்ற காணியின் பிரித்து வேறாக்கப்பட்ட ஏ எழுத்தைக் கொண்ட றூட் ஒன்றும் பேர்ச்சஸ் ஏழும் (0ஏ. 1றூ. 07பே.) கொண்ட மிகப்பெரிய காணியில் அனைத்து பயிர்ச்செய்கை, மரங்கள், பழவர்க்கங்கள், கட்டிடங்கள் போன்ற அனைத்தும் உள்ளடங்கலாக,

மேலதிக விவரங்களுக்காக 2002.01.04 ஆந் திகதியின் அரச வர்த்தமானப் பத்திரிகையிலும், 2003.02.14 ஆந் திகதியின் "தினமின", "தினகரன்", "த ஐலண்ட்" போன்ற சஞ்சிகைகளிலும் பிரசுரமாகிய ஏலவிற்பனை பகுதியை கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.**- மாத்தறை திக்குவல்லை பாதையில் கி.மீ. 1 1/2 அளவு செல்ல வெலெவத்தமன் சந்தியைக் காணலாம். அங்கிருந்து இடப்பக்கமாக திரும்பி வெலேவத்த பாதையில் கி. மீ. 01 அளவு தூரம் செல்ல தீயகஹ அபரெக்க பாதையைக் காணலாம். அப்பாதையில் கி. மீ. 02 அளவு தூரம் செல்ல நாவிமன தெற்கு கூட்டுறவு கடை கிடைக்கும். அங்கிருந்து இடப்பக்கமாக ஹுன்கங்கொட பாதையில் கி. மீ. 02 அளவு தூரம் செல்ல பாதையின் தெற்குப் புறமாக இக்காணி அமைந்திருக்கும்.

**செலுத்தும் முறை.**- ஏலவிற்பனை தீர்ந்து விட்டதும் கீழ் கண்டபடி கொள்வனவாளரினால் பணமாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 25% ;
(2) உள்ளூராட்சி சபைகளுக்காகச் செலுத்தப்பட வேண்டிய உள்ளூராட்சி வரியாக 1% (ஒரு வீதம்) ;
(3) ஏல விற்பனையாளர் தரகு என, விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) இலிகிதர் அறிவிப்பாளர் கட்டணம் ரூபா 500 ;
(5) விற்பனை செலவும் இதர கட்டணங்கள் இருப்பின் அவையும் ;
(6) விற்பனை உறுதிப்பத்திரத்திற்கான முத்திரை கட்டணம் போன்றனவும், கொள்வனவு விலையில் மீதி 75%க்கான பணம் ஏலவிற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மாத்தறை பம்புரண அநாகாரிக தர்மபால மாவத்தையில் இலக்கம் 382ஏ என்ற நிலையத்திலுள்ள றுஹுன அபிவிருத்தி வங்கியின் பிரதான அலுவலகத்தின் சாதாரண அதிகாரிக்கு செலுத்துக. மேற்படி 30 நாட்களுக்குள் குறிப்பிட்ட பணத்தை செலுத்தத் தவறின் விற்பனை விலையில் செலுத்திய 25%க்கான பணத்தை செலுத்தாவிடின் மீண்டும் அவற்றை காணியை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமையுண்டு.

உரிமைக்கோறும் ஒப்பினையையும் மேலதிக விவரங்களையும் மேலுள்ள முகவரியில் பெறலாம். தொலைபேசி இலக்கம் : 041-2231532, 2226208, 2226209.

ஜீ. பீ. ஆனன்த (சமாதான நீதவான்),
அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளரும்,
நீதிமன்ற ஆணையாளரும், மதிப்பீட்டாளரும்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி இல.: 041- 2228731.
7-24

## மக்கள் வங்கி-(சுதுவெல்ல கிளை)

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கத் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் பிரிவு 29 டி இன் கீழான விற்பனை

**அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் சிரி டி. லியணசூரிய அவர்களால் வரையறுக்கப்பட்ட 03.08.1982 ஆந் திகதியிடப்பட்ட 2563 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிக்கப்பட்டுள்ள மேல் மாகாணம், கொழும்பு மாவட்ட, மாநகர சபைக்கு உட்பட்ட மருதானையில் உள்ள வட்டார இலக்கம் 26 மருதானை, தேவநம்பியதிஸ்ஸ மாவத்தை வரி மதிப்பீட்டு இலக்கம் 153 இல் அமைந்துள்ள காணி அதில் அமைந்துள்ளதும் உள்ளடங்கலாக ஏல விற்பனை**

**(விஸ்தீரணம் - துண்டு 1 -0ஏ. 0றூ. 6.95பே.**

மக்கள் வங்கியால் எமக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணி தொடக்கம் எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**மேலதிக விவரங்களுக்கு.**- 05.06.1998 ஆந் திகதியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியையும், 21.05.1998 இல் வெளியான செய்திப் பத்திரிகைகளையும், ('தினமின' 'டெய்லி நியூஸ்', தினகரன்) பார்க்கவும்.

**கொடுப்பனவுமுறை.**- ஏல விற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சத வீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூவுவோர் கட்டணம் ரூபா 500.00 ;
(5) விற்பனைச் செலவு மற்றும் ஏனைய கட்டணங்கள் எதுவும் இருந்தால் அவை ;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் கொழும்பு 1, டியூக். 11ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி, வலயத் தலைமை அலுவலகத்தின் (மேற்கு1) உதவிப் பொது முகாமையாளரிடம் செலுத்த வேண்டும். தொலைபேசி இலக்கங்கள் : 2387068, 2344983.

காணி உறுதியின் பிரதியையும், ஏனைய விவரங்களையும் மேற்கூறப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

மேல் கூறப்பட்ட தொகை குறிப்பிட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10 வீதத்தை பறிமுதல் செய்வதற்கும், உடைமையை மீள விற்பனை செய்வதற்குமான உரிமை வங்கிக்கு உண்டு.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ISO 9001 : 2000 இலக்க தராதரமுடைய
பிரபல முன்னோடி பட்டய ஏலவிற்பனையாளர்,
பெறுமதி மதிப்பீட்டு ஆலோசகர்
மற்றும் காணி செயல் முகவர்.

| | |
|---|---|
| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும்: |
| 24, டொரிங்டன் வீதி, | 290, ஹவ்லொக் றோட், |
| கண்டி. | கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680, 2585408 |
| தொலைபேசி/ தொலைநகல் : 081-2224371 | தொலைபேசி/ தொலைநகல் : 011-2588176 |
| மின்னஞ்சல் : schokmankandy@slt.net.lk | மின்னஞ்சல் : schokman@samera1892.com |

7-99

## மக்கள் வங்கி - கெஹெல்வத்தைக் கிளை

1961 ஆம் ஆண்டின் மக்கள் வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் யாப்பு இல. 29 இன் திருத்திய யாப்பு 29டி இன்படி 1986 ஆம் ஆண்டு யாப்பு இல. 32 இன் கீழ் விற்பனை

**காணி ஏல விற்பனை**

மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம் சியனே கோரளே, அதிகாரிபத்து, களனிய நகர சபை எல்லைக்குட்பட்ட கோனவவ கிராமத்தில் அமைந்துள்ள கோனகஹவத்தை என்றதும் தற்பொழுது லெஸ்மான் என்றழைக்கப்படுகின்ற அனுமதி பெற்ற நில அளவையாளர் டப்ளியு. பீ. டீ. சில்வாவினால் அளந்து எல்லைகள் வரையறை செய்யப்பட்ட 1985.11.20 ஆந் திகதியிடப்பட்ட வரைவு இல. 161 இல் துண்டு இல. 22 எனக் குறிப்பிடப்பட்ட பதினைந்து தசம் சைபர் நான்கு பேர்ச் (0ஏ. 0றூ. 15.04பே.) பரப்பளவு கொண்ட பெறுமதி வாய்ந்த காணி மற்றும் அதில் உள்ள மரம் செடி கொடிகள், கட்டிடங்கள், துணைக் கருவிகள் மற்றும் நிரந்தரமாகப் பொறுத்தப்பட்டுள்ள எந்திரங்கள் அடங்கலாக அங்கே உள்ள அனைத்தும் (மேற்படி காணி) கொழும்பு காணிப் பதிவகத்தில் சீ 466/69 இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மக்கள் வங்கியினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மேலே விபரிக்கப்பட்டுள்ள காணியை நான் 2007, யூலை 21 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவுள்ளேன்.

**தீர்மானம் பற்றிய மேலதிக விபரங்களுக்கு.**- 2007.03.30 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2007.03.19 ஆந் திகதிய "தினமின", "டெயிலி நியூஸ்" மற்றும் "தினகரன்" ஆகிய நாளிதழ்களைப் பார்க்கவும்.

**காணியைச் சென்றடைகின்ற வழி.**-களனிய விகாரையிலிருந்து பியகம விதியூடாக நாகஹமுள்ள சந்தி வரை சென்று இடது புறமாகத் திரும்பி கோனவெல வீதியூடாக சுமார் 1 1/2 கீ. மீ. வரை கேரகஹமுள்ள சந்திவரை சென்று இடது புரமாகத் திரும்பி கீள்ஸ் வீடமைப்புத் திட்டம் (சிறிய பாதை) ஊடாக சுமார் 500 மீற்றர் தூரம் சென்று குறித்த சொத்தை சென்றடையலாம். இக்காணி இல. 22, கோனபொல உப தபாலகத்திற்கு அருகாமையில் அமைந்துள்ளது.

**கட்டணம் செலுத்தும் முறை.**-வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் பின்வரும் தொகைகளைக் காசாக செலுத்தல் வேண்டும் :-

கொள்வனவு விலையின் பத்துவீதம் (10%) ; விற்பனை வரியாக உள்ளூர் அதிகாரசபைக்கு செலுத்த வேண்டியது ஒரு வீதம் (1%) ; ஏலதாரர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2%) ; விற்பனை நிலத்துக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2000; இலிகிதர் மற்றும் கூவுவோர் கூலி ரூபா 500.00 ; விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு, கொள்வனவு விலையில் மிகுதி 90%, விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி லிமிடெட்டில் வைப்புச் செய்தல் வேண்டும்.

காணி உறுதி மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை "கொழும்பு 3, காலி வீதி, இல. 90, செலான் வங்கி லிமிடெட், பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்)," இடமிருந்து பெற்றுக்கொள்ளவும் முடியும்.

தொலைபேசி 2387068, 2393678, 2327848

துசித கருணாரத்ன (ச. நீ.),
அனுமதிபெற்ற அளவையாளர்,
நீதிமன்ற ஆணையாளரும், மதிப்பீட்டாளரும்.

ரி. அன்ட் எச் ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவ
தொலைபேசி : 2696155, 2572940
7-108

## செலான் வங்கி லிமிட்டெட் - பாணந்துறைக் கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

**காணி ஏல விற்பனை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சியனே கோரளை, அதிகாரி பத்து, பியகம பிரதேச சபை எல்லைக்குள் பொல்லேகளை கே. ஈ. பெரேரா மாவத்தை இல. 141/ 7, என்னுமிடத்தில் உள்ள கோன்கஹவத்தை என்றழைக்கப்படுகின்ற அனுமதி பெற்ற நிலஅளவையாளர் எம். டப்ளியூ. டீ. எஸ். டி சில்வாவினால் அளந்து எல்லைகள் வரையறை செய்யப்பட்ட வரைவு இல. 2128 மற்றும் 1993 ஏப்பிறல் 4 ஆந் திகதியிடப்பட்ட துண்டு இல. 1, கொண்ட இரண்டு றூட் மற்றும் தசம் மூன்று ஒன்று மற்றும் இரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 2.31றூ. 2பே.) பரப்பளவு கொண்ட பெறுமதிவாய்ந்த காணி மற்றும் அதில் உள்ள மரம், செடி, கொடிகள் மற்றும் கட்டிடங்கள் அடங்கலாக உள்ள காணி. மேற்படி காணி கொழும்பு காணிப்பதிவகத்தில் சி. 532/27 ஆம் இலக்கத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

*(கடன்பட்டார் என்ற வகையில் பாணந்துறையில் வசிக்கும் பொல்லேகலையைச் சேர்ந்த சித்ரா என்பவருக்கு வழங்கப்பட்ட சலுகைகளுக்காக செலான் வங்கி லிமிட்டெட்டிற்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.)*

மேலே விபரிக்கப்பட்ட காணியை நான் 2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற வழி.**- கொழும்பிலிருந்து கண்டி வீதியூடாக பேலியகொடை 4 ஆம் கட்டை வரை சென்று வலபுறமாக பியகம வீதியில் சுமார் 7.8 கி. மீ. தூரம் சென்று பொல்லேகலை

சந்தியால் இடதுபுறமாகவுள்ள விஜயராம வீதியில் சுமார் 400 மீற்றர் தூரம் விஜயராம விகாரை வரை சென்று குறித்த விஹாரை அமைந்துள்ள இடத்தில் கே. பீ .பெரேரா மாவத்தையினால் திரும்பி சுமார் 100 மீற்றர் சென்று வலது பக்கமாக உள்ள வளைவால் இடதுபக்கம் திரும்பி இல. 221/4 இடத்தில் 15 அடி தொலைவில் செம்மண் வீதியில் சுமார் 100 மீற்றர் சென்றவுடன் மேற்படி வீதி முடிவடையுமிடத்தில் அமைந்துள்ள குறித்த காணியைச் சென்றடையலாம்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 2007.04.20 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2007.03.07 ஆந் திகதி "டெயிலி மிரர்" மற்றும் "லங்காதிப" மற்றும் 2007.03.13 ஆந் திகதிய "வீரகேசரி" நாளிதழ்களையும் பார்க்கவும்.

**கட்டணம் செலுத்தும் முறை.**- வெற்றிகரமான கொள்வனவாளர் ஏலவிற்பனை முடிவில் பின்வரும் தொகைகளை காசாகச் செலுத்த வேண்டும் :-

கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ; விற்பனை வரியாக உள்ளூரதிகார சபைக்குச் செலுத்த வேண்டியது ஒரு வீதம் (1%) ; ஏலதாரர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2%) ; விற்பனை நிலத்துக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2000; இலிகிதர் மற்றும் கூவுவோர் கூலி ரூபா 500 ; விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு, கொள்வனவு விலையின் மிகுதி 90% ; விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி லிமிட்டெட்டில் வைப்புச் செய்தல் வேண்டும்.

காணி உறுதி மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை கொழும்பு 3, காலி வீதி, இல. 90. செலான் வங்கி லிமிட்டெட், பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்) இடமிருந்து பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி : 011-2456285, 2456263, 2456284

துசித கருணாரத்ன (ச. நீ.),
அனுமதிபெற்ற அளவையாளர்,
நீதிமன்ற ஆணையாளரும், மதிப்பீட்டாளரும்.

ரி அன்ட் எச் ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவ.
தொலைபேசி இல. : 2696155, 2572940
7-109

---

### வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி - வெளிமட கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன் மீட்புச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**ஊவா மாகாணம் பதுளை மாவட்டம் உடுகிந்த எல்லைக்குள் தபஷனி பலாத கோரலே ரத்காவை கிராமத்தில் இருக்கும் 'கொன் எலவன மங்கட' என்ற பெயரால் அழைக்கப்படும் இடத்தில் அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் பி. டபிள்யு. நந்தசேன என்பவரால் 1994 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 13 ஆந் திகதி அளந்து வேறாக்கப்பட்ட இலக்கம் 660 என்ற வரைபடத்தின் பிரகாரம் வேறாக்கப்பட்ட லொட் 1 என்ற காணி ஏல விற்பனை**

**(விஸ்தீரணம் : 1 றூட். 29பேர்ச்சஸ்)**

*(பண்டாரவளை பிரசித்த நொத்தாரிசு எச். ராஜபக்ஷ என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான வரையறுக்கப்பட்ட ஹெட்டன் நஷனல் வங்கியின் பெயரால் எழுதப்பட்டதுமான 2005.01.04 ஆந் திகதிய இலக்கம் 70 முறியின் கீழ் வருமதியான கொடுப்பனவில் ரத்நாயக்க முதியான்சேலாகே புஞ்சி பண்டார ரத்நாயக்க என்பவர் கடனாளராக தவணை தவறியுள்ளார்.)*

ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என் மீது அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், கீழே குறிப்பிடப்படும் சொத்து, அது அமைந்துள்ள இடத்திலேயே 2007 யூலை 23 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மான அறிவித்தலுக்காக.**- 2007.03.09 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2007 மாச்சு 21 ஆந் திகதிய "ஐலண்ட்", "திவயின", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- ஏலவிற்பனை முடிவில் வெற்றிகரமான கொள்வனவாளர் கீழே குறிப்பிட்ட கட்டணங்களை பணமாகச் செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூராட்சி அதிகார சபைக்குச் செலுத்த வேண்டிய விற்பனை வரி 1% ;
(3) ஏலதாரர் தரகுப்பணமாக விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) கிளார்க் கூவுவோர் கட்டணமாக ரூபா 500 ;
(5) வேறு செலவினங்கள் ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுகளின் அத்தாட்சிப்படுத்தற் கட்டணமாக ரூபா 2000.

விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனைத் திகதியில் இருந்து 30 வேலை நாட்களுக்குள் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட்டிற்குச் செலுத்தப்படல் வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டவாறு, எஞ்சிய தொகை குறிப்பிட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிடின் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% ஐப் பறிமுதல் செய்து மீள விற்பனை செய்யவும் உரிமை வங்கிக்குண்டு.

உரிமைப்பத்திரங்களையும் மேலதிக விவரங்களையும் "பிரதம முகாமையாளர் (கடன் அறவீடு), வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி, இல. 470, டி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு - 10, தொலைபேசி இல. 2661815, 2661816 இல் பெற்றுக்கொள்ளலாம்.

என். எச். பீ. எம். ஆரியரத்ன,
நீதிமன்ற ஆணையாளரும்,
அதிகாரம் பெற்ற ஏலதாரரும்.

இல. 34/31 மற்றும் 32,
"நீதி சட்டத்தரணிகளின் அலுவலகத் தொகுதி",
கொழும்பு 12.
7-112

---

### வரையறுக்கப்பட்ட செலான் வங்கி - பழைய சோனகத் தெரு கிளை

*1990 ஆம் ஆண்டின 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**கொழும்பு 12, மீரானியா வீதி, முதன்மை வர்த்தக ஆதனம் பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகர சபையினுள், வட்டார இல. 16 அளுத்கடை கிழக்கு, அளுத்கடை, மீரானியா வீதி, வழியே அமைந்துள்ளதும் மீரானியா வீதி (முன்னர் பெரிய வீதி), வரிமதிப்பு இல. 209 (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். ரீ. சமீர் அவர்களால் தயாரிக்கப்பட்டு 1964.2.7 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 810 இல் துண்டு 1 இன் ஒரு பாகமாக இருக்கின்ற) ஐக் கொண்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜே. பீ. எல். அபேகோன் அவர்களால் தயாரிக்கப்பட்டு 1996, நவெம்பர் 14 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 5511 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அடையாளமிடப்பட்டுள்ளதுமான காணியினது) ஏல விற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : 5.7 பேர்ச்சஸ்)**

*(பிரசித்த நொத்தாரிசு எம். எ. எஸ். பீரிஸ் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 1998.10.15 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 1225 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ள கடப்பாடுடையவரான கொழும்பைச் சேர்ந்த மொஹமட் இஸ்மாயில் மொஹமட் ஸரூக் இற்கு சொந்தமான ஆதனம்)*

வரையறுக்கப்பட்ட செலான் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2007, யூலை 23 ஆந் திகதி திங்கட்கிழமை மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 1999.12.03 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 1999.11.12 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினமின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம் :**

(1) ஏல முடிவில் கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ;
(3) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;
(4) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(5) ரூபா 44,943.75 ஐ விஞ்சாதவாறு மொத்த விளம்பரச் செலவுகளின் 50% (ஐம்பது வீதம்) ;
(6) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(7) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தற் கட்டணம் ரூபா 2,500.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் கொழும்பு 3, காலி வீதி, இல. 90, சிலிங்கோ செலான் கோபுரங்கள் 12 ஆவது தளம், வரையறுக்கப்பட்ட செலான் வங்கி, பிரதிப் பொது முகாமையாளர் (சட்ட சம்பந்தமான பகுதி) அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. : 4-701000, 2456789

டன்ஸ்டன் கெலார்ட்,
நீதிமன்ற ஆணையாளரும் தரகரும்,
அரசினால் சான்றுபடுத்தப்பட்டுள்ள நிபுணத்துவம் பெற்ற ஏலதாரர், விலைமதிப்பிடுநரும் ஆதன முகவரும்.

42, துட்டுகெமுனு தெரு,
பாமன்கடை,
தெஹிவளை.
தொலைபேசி இல. : 2814743
தொலைபேசி/தொலைநகல் இல. : 2814742, 2814744
துரித அழைப்பு : 0722-250422
7-132

---

### மக்கள் வங்கி - பொரளை கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**மாவனெல்லையில் பிரமாண்ட ஆதனம் "ஸ்ரீ லங்கா இறப்பர் புறடக்ட்ஸ் எக்ஸ்போர்ட் கோர்ப்பரேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்" (சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், கலபொட கோறளை, கெலபடே மாவட்ட இறைவரி அலுவலர் பிரிவு, மாவனல்லை நகர சபை எல்லைகளுக்குள் இல. 3 ரன்கொத்தி திவெல பிரிவு நுண்கொமுவ கிராமத்தில் அமைந்துள்ளதும் நுண்கொமுவ வீதி, வரிமதிப்பு இல. 15/16 மற்றும் 15/17 ஐக் கொண்டதும் 'யக்கலே வத்த' என அழைக்கப்படும் காணியின் நில அளவையாளர் நாயகத்திற்கு பதிலாக சப்பிரகமுவ பிரிவு நிலஅளவையாளர்கள் அல்லது ஆணையாளரினால் தயாரிக்கப்பட்டு 1972, மாச்சு 6 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 578 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அடையாளமிடப்பட்டதுமான பெறுமதிமிக்க காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மண் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து) ஏலவிற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : 12ஏ. 0றூ. 29 பே.)**

மக்கள் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2007, யூலை 24 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2004.9.24 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2004.9.8 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினமின" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்தவேண்டும் :-

(1) ஏல முடிவில் கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(5) விற்பனைச் செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (எவையேனுமிருப்பின்) ;
(6) விற்பனை சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம் ;

கொள்வனவு விலையின் 90% (தொண்ணூறு வீதம்) விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் "கொழும்பு 1, டியூக் வீதி, இல. 11, வலய அலுவலகம் (மேற்கு 01), மக்கள் வங்கி, உதவிப் பொது முகாமையாளர்" அவர்களிடம் செலுத்தப்பட வேண்டும். தொலைபேசி இல. : 2387068, 2393678, 2344985.

உரித்து உறுதிகளையும் வேறேதேனும் குறிப்புக்களையும் மேற்கூறப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

சொல்லப்பட்ட தொகை மேற்குறிப்பிட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள்விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

டன்ஸ்டன் கெலார்ட்,
நீதிமன்ற ஆணையாளரும் தரகரும்,
நிபுணத்துவம்பெற்ற ஏலதாரர்,
ஆதன முகவரும் விலைமதிப்பிடுநரும்

42, துட்டுகெமுனு தெரு,
பாமன்கடை,
தெஹிவளை.
தொலைபேசி இல. : 2814743
தொலைபேசி/தொலைநகல் இல. : 2814742, 2814744
துரித அழைப்பு : 0772-250422
7-133

---

### மக்கள் வங்கி - பேருவளை கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி ஆம் பிரிவின் கீழ் 1999.4.19 ஆந் திகதியன்று நடைபெற்ற அதனது கூட்டத்தில் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் விற்பனை*

**பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், களுத்துறை தொட்டமுனை தெற்கு, பேருவளை பெத்தே, கரண்ட கொடவில் அமைந்துள்ளதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர், யூ. எம். டீ சில்வா அவர்களால் தயாரிக்கப்பட்டு 1976, சனவரி 2 திகதியிடப்பட்ட வரைபடம் இல. 1986 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 2 என அடையாளமிடப்பட்டுள்ள "கொட்டகேவத்தை" என அழைக்கப்படுவதுமான காணியினது) அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ஏலவிற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 1றூ. 37.91 பே.)**

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- கொழும்பு காலி பெருவீதி வழியே பேருவளை வரை சென்று, இடப்பக்கம் திரும்பி பேருவளை கத்தோலிக்க தேவாலயம் மற்றும் பொலிஸ் நிலையத்திற்கிடையே இட்டுச் செல்லும் சென். ஏன்ஸ் வீதியில் கரந்தகொடை சந்தி வரை ஏறக்குறைய 1 கி. மீ. செல்ல ஒருபக்கம் இட்டுச் செல்லும் இரண்டு கிராம சபை வீதியை இணைக்கும் மற்றும் இடையினுள் அமைந்துள்ள இவ்வாதனத்தை அடையலாம்.

மக்கள் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2007, யூலை 28 ஆந் திகதி சனிக்கிழமை மு. ப. 10.30 மணிக்கு மக்கள் வங்கி, பேருவளை கிளை வளவுளில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2000.2.11 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2000.05.25 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினமின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்தவேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(5) விற்பனை செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (எவையேனுமிருப்பின்) ;
(6) விற்பனை சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் "பாணந்துறை, காலி வீதி, பிரதேச தலைமை அலுவலகம் (களுத்துறை), மக்கள் வங்கி, பிரதேச முகாமையாளர்" அவர்களிடம் செலுத்தப்பட வேண்டும். தொலைபேசி இல. : 038-2232438, 038-2235401.

சொல்லப்பட்ட தொகை மேற்குறிப்பிட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள்விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

டன்ஸ்டன் கெலார்ட்,
நீதிமன்ற ஆணையாளரும் தரகரும்,
அரசினால் சான்றுபடுத்தப்பட்டுள்ள
நிபுணத்துவம் பெற்ற ஏலதாரர், விலைமதிப்பிடுநர்,
ஆதன முகவரும்.

42, துட்டுகெமுனு தெரு,
பாமன்கடை,
தெஹிவளை.
தொலைபேசி இல. : 2814743
தொலைபேசி/தொலைநகல் இல. : 2814742, 2814744
துரித அழைப்பு : 0772-250422
7-134

**வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி - ஹட்டன் கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**பெறுமதிமிக்க ஆதனம் (மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டம், நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவு, ஓயபலாத்த கோறளை நேஸ்பை எஸ்ட்டேட்டில் அமைந்துள்ளதும் 'நேஸ்பை கார்டின்' என அழைக்கப்படும் காணியின் உள்ளிருந்தும் புறமுமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். எம். சமரநாயக்க அவர்களால் தயாரிக்கப்பட்டு 2005, மாச்சு 10 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 4986 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அடையாளமிடப் பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும்) ஏலவிற்பனை**

**(காணியின் விஸ்தீரணம்: 1றூட் 35 பேர்ச்சுகள்)**

*(கண்டியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எம். எஸ். பெரேரா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2005, திசெம்பர் 6 திகதியிடப்பட்ட முறி இல. 780 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணைதவறியுள்ள கடப்பாடுடையவர்களான அன்ரன் ரொனால்ட் செபஸ்தியன், நடராஜா நவரட்ணம் மற்றும் ஸில்வெஸ்ரர் செபஸ்தியன் கிறிஸான் என்ற ஸில்வெஸ்ரா கிறிஷான் ஆகியோரால் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கியிற்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனம்)*

வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2007, யூலை 25 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 20007, மே 18 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2007, மே 28 ஆந் திகதிய "திவயின", "ஐலண்ட்" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிபெறும் கொள்வன வாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்தவேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) விற்பனையில் உறப்பட்ட மொத்த விளம்பரச் செலவுகள்;
(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000.

கொள்வனவு விலையின் எஞ்சிய 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கிக்கு செலுத்த வேண்டும். எஞ்சிய தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படா விட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்துவீதம்) ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்து உறுதிகளையும் வேறேதேனும் குறிப்புகளையும் "கொழும்பு 10, ரி. பி. ஜாயா மாவத்தை, இல. 479, 'எச். என். பி. கோபுரங்கள்', வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி, பிரதம முகாமையாளர் (அறவீடுகள்)" இடம் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி இல. : 011-2661815, 2661816.

என். எச். பீ. எவ். ஆரியரத்ன,
உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பிடுநர்,
மற்றும் நீதிமன்ற ஆணையாளர்.

இல. 34/31 மற்றும் 32,
"சட்டதரணிகள் அலுவலக கட்டிடத்தொகுதி",
கொழும்பு 12.
7-135/1

---

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2007 இன் இல. 244

இல. : டீஆர்எவ்/ஆர்ஈசீரீ/580 (iv) ஏவை.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட மரணத்தின் பின்னர் பதவியுயர்த்துதல்

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தரின் மரணத்தின் பின்னரான பதவியுயர்த்துதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

(அ) மேஜர் துவான் நிசாம் முதாலிப், உபுப-
(1) 2005, மே மாதம் 01 ஆந் திகதியிலிருந்து மரணத்தின் பின்னர் லெப்டினன்ட் கர்னல் பதவிக்கு பதவியுயர்த்துதல் ;
(2) 2005, மே மாதம் 31 ஆந் திகதியிலிருந்து மரணத்தின் பின்னர் கர்னல் பதவிக்கு பதவியுயர்த்துதல்.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,
கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, ஏப்பிறல் 19.
7-34/1

---

2007 இன் இல. 245

இல. : டீஆர்எவ்/ஆர்ஈசீரீ/580 (iv) ஏவை.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதல், மரணத்தின் பின்னர் பதவியுயர்த்துதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தரின் பதவி நிரந்தரமாக்குதல்/ மரணத்தின் பின்னர் பதவியுயர்த்துதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

(அ) கப்ரின் (தற்காலிக மேஜர்) பெந்தொட்ட ஹேவகே பர்சி ஜகத், கவ்ப-
(1) 2006, யூலை மாதம் 22 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவியினை நிரந்தரமாக்குதல்
(2) 2006, ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதியிலிருந்து மரணத்தின் பின்னர் லெப்டினன்ட் கர்னல் பதவிக்கு பதவியுயர்த்துதல்.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,
கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, மே 09.
7-34/3

---

2007 இன் இல. 246

இல. : டீஆர்எவ்/ஆர்ஈசீரீ/580 (iv) ஏவை.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட மரணத்தின் பின்னர் பதவியுயர்த்துதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தரினது மரணத்தின் பின்னரான பதவியுயர்த்துதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

(அ) உ/65120 கப்ரின் கருணாதிலக்க முதியன்சேலாகே சமிந்த பண்டார கருணாதிலக்க, கரெ-
(i) 2006, யூலை மாதம் 31 ஆந் திகதியிலிருந்து மரணத்தின் பின்னர் மேஜர் பதவிக்கு பதவியுயர்த்துதல்.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,
கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, ஒகத்து 24.
7-34/2

---

2007 இன் இல. 247

இல. : டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/2365.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதல், இளைப்பாறுதல்

**பதவி நிரந்தரமாக்குதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, ஏப்பிறல் மாதம் 06 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவியில் நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/60901 கப்ரின் (தற்காலிக மேஜர்) கமராலலாகே சுனில் ஆரியசேன, ஆர்எஸ்பீ, கரெ

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தர படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/60901 மேஜர் கமராலலாகே சுனில் ஆரியசேன, ஆர்எஸ்பீ, கரெ

அதியுத்தமனாரின் ஆணைப்படி,
கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, ஒகத்து 02.
7-40

---

2007 இன் இல. 248

இல. : டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/2369.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதல், இளைப்பாறுதல்

**பதவி நிரந்தரமாக்குதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, யூன் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவியில் நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/60671 கப்ரின் (தற்காலிக மேஜர்) ஜானக்க எதிரிசிங்க, ஆர்எஸ்பீ, இகாப

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, யூலை மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தர படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக் கப்பட்டுள்ளது :-

உ/60671 மேஜர் ஜானக்க எதிரிசிங்க, ஆர்எஸ்பீ, இகாப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,
கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, யூலை 31.
7-41

---

2007 இன் இல. 249

இல. : டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/2368.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதல், இளைப்பாறுதல்

**பதவி நிரந்தரமாக்குதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, யூன் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவியில் நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/61052 கப்ரின் (தற்காலிக மேஜர்) கபில ஸ்ரீ ரவிந்திர கன்தே விதானாராலகே, ஆர்எஸ்பீ, இஇபொதுசேப

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, யூன் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தர படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/61052 மேஜர் கபில ஸ்ரீ ரவிந்திர கன்தே விதானாராலகே, ஆர்எஸ்பீ, இஇபொதுசேப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,
கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, மே 19.
7-42

---

2007 இன் இல. 250

இல. : டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/2367.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, ஒகத்து மாதம் 04 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தர படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/60965 மேஜர் டெல்லப்பிலி விஜேரத்னலாகே நியன்ஸி தயாநாத் விஜேரத்ன, ஆர்எஸ்பீ, இகாப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,
கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, ஒகத்து 02.
7-36

---

2007 இன் இல. 251

இல. : டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/2350.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, யூலை மாதம் 03 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தர படையிலிருந்து இளைப் பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/62814 கப்ரின் லக்மால் பிரியசாந்த பலகல்ல, ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, இப்ப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,
கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, யூன் 21.
7-39

---

2007 இன் இல. 252

இல. : டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/2370.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல், இலங்கை தரைப்படையின் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல்

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, யூலை மாதம் 04 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தர படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/62650 கப்ரின் (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) ஜயசிங்க ஆரச்சிகே பத்மசிறி, இமிஇபொ

**இலங்கை தரைப்படையின் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, யூலை மாதம் 04 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தர (பொது) உப

சேவைக்கு மாற்றம் செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/62650 கப்ரின் (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) ஜயசிங்க ஆரச்சிகே பத்மசிரி, இமிஇபொ

அதியுத்தமனாரின் ஆணைப்படி,
கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, ஓகத்து 02.
7-31

---

2007 இன் இல. 253

இல. : டீஆர்எவ்/21/ஆர்ஈசீர்/2373.

**இலங்கை தரைப்படை – நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, யூலை மாதம் 10 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தர படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்ரின் ஹர்ஷ சந்தமால் வீரசூரிய, இஇபொவீப (உ/62922)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,
கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, ஓகத்து 07.
7-38

---

2007 இன் இல. 254

இல. : டீஆர்எவ்/21/ஆர்ஈசீர்/2366.

**இலங்கை தரைப்படை – நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல், இலங்கை தரைப் படையின் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல்

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, யூலை மாதம் 23 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/62400 கப்ரின் (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) பேலி கன்கானமலாகே சிரிபால, இகாப

**இலங்கை தரைப்படை நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, யூலை மாதம் 23 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/62400 கப்ரின் (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) பேலி கன்கானமலாகே சிரிபால, இகாப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,
கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, ஓகத்து 02.
7-32

---

2007 இன் இல. 255

இல. : டீஆர்எவ்/21/ஆர்ஈசீர்/2372.

**இலங்கை தரைப்படை – நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல், இலங்கை தரைப்படையின் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல்

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, ஓகத்து மாதம் 03 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/61190 கப்ரின் (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) அபேசேக்கர ஹெட்டிகே ஹென்றி, கவீப

**இலங்கை தரைப்படை நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல்**

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2006, ஓகத்து மாதம் 03 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/61190 கப்ரின் (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) அபேசேக்கர ஹெட்டிகே ஹென்றி, கவீப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,
கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, ஓகத்து 02.
7-33

---

2007 இன் இல. 256

இல. : டீஆர்எவ்/21/ஆர்ஈசீர்/2364.

**இலங்கை தரைப்படை – நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட கட்டாய இளைப்பாற்றுவித்தல்

இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையில் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, யூன் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து கட்டாய இளைப்பாற்றுவித்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/64443 லெப்டினன்ட் பொலபே ஹேரத் முதியன்சேலாகே புத்திக்க சமிந்த தர்மகீர்த்தி, பொசேப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,
கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, ஓகத்து 02.
7-37

---

இல. : டீஆர்எவ்/21/ஆர்ஈசீர்/2376.

**இலங்கை தரைப்படை – நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அபகீர்த்தியாக தரைப்படைச் சேவையிலிருந்து அகற்றுதல்

இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையின் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, யூன் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து அபகீர்த்தியாக தரைப்படைச் சேவையிலிருந்து அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/63506 லெப்டினன்ட் வட்டாரக்க கமகே அசிந்திர மாதவ நரேந்திரசிரி, இபப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,
கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, செத்தெம்பர் 06.
7-43

---

இல. : டீஆர்எவ்/21/ஆர்ஈசீர்/2371.

**இலங்கை தரைப்படை – நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல்

இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையின் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, யூன் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/64664 லெப்டினன்ட் மனிக்குவடு சாருக்க நிரஞ்சன விமல சூரிய, இஇசேப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,
கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, ஓகத்து 01.
7-44

---

2007 இன் இல. 257

டீஆர்எவ்/ஆர்ஈசீர்/30ஏவை.

**இலங்கை தரைப்படை – தொண்டர் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வு, நியமனம்

**பதவியுயர்வு**

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2006, ஓகத்து மாதம் 26 ஆந் திகதியிலிருந்து மேஜர் ஜெனரால் பதவிக்கு பதவியுயர்த்துதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/1956 பிரிகேடியர் வரக்காபிட்டிய அபேகோன்கே தொன் சுனில் சில்வா

**நியமனம்**

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2006, ஓகத்து மாதம் 26 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் தொண்டர் படையின் பிரதி சேனை ஏவுநர் பதவிக்கு நியமனம் செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/1956 மேஜர் ஜெனரால் வரக்காபிட்டிய அபேகோன்கே தொன் சுனில் சில்வா

அதியுத்தமனாரின் ஆணைப்படி,
கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, செத்தெம்பர் 08.
7-45/2

---

2007 இன் இல. 259

டீஆர்எவ்/ஆர்ஈசீர்/261.

**இலங்கை தரைப்படை – நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட

இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, மாச்சு மாதம் 21 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படை தொண்டர் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/4675 லெப்டினன்ட் விக்டர் வினோத் ஹேவா, கவீப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,
கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, யூலை 31.
7-35

---

# அரசாங்க அறிவித்தல்கள்

**2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்**

34 (2) (அ) பிரிவின் கீழான அறிவித்தல்

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத் தின் 34(2) (அ) பிரிவின்கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய ஆகிய நான், கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள நிறுவனத்தை அப்பிரிவின் நோக்கங்களுக்காக அனுமதிக்கப்பட்ட அறக்கொடை நிறுவனமாக இத்தால் அறிவிக் கின்றேன்.

ரஞ்சித் சியம்பலாபிட்டிய,
பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 1,
2007.06.14.

**அட்டவணை**

"கொமர்ஷல் வங்கி சமூகப் பொறுப்பின் உயர் கல்விக்கான புலமைப் பரிசில் நிதி"

7-70

---

**2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்**

34(2) (அ) பிரிவின் கீழான அறிவித்தல்

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத் தின் 34(2) (அ) பிரிவின்கீழ் எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய ஆகிய நான், கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள நிறுவனத்தை அப்பிரிவின் நோக்கங்களுக்காக அனுமதிக்கப்பட்ட அறக்கொடை நிறுவனமாக இத்தால் அறிவிக் கின்றேன்.

ரஞ்சித் சியம்பலாபிட்டிய,
பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2007, யூன் 15.

**அட்டவணை**

"ஆர்க்-என்-சியல் (தேதுனு) நிறுவனத்தின் வறிய குழந்தைகள் பாதுகாப்பு நிதியம்"

7-71

## திருமண வினைமுறை ஒழுங்கீடு செய்வதற்கான தேவாலயம் பதிவு செய்தல்

விவாகப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் (112 ஆம் அத்தியாயம்) 10 ஆம் பிரிவின் கீழ் இலங்கைப் பதிவாளர் நாயகம் லபுகல கருணாநாயககே ரத்னசிறி ஆகிய நான் பொதுக் கிறிஸ்தவ வழிபாட்டுத் தேவாலயமாக உபயோகிக்கப்படும் பின்வரும் கட்டிடம் திருமண வினைமுறை ஒழுங்கீடு செய்யும் நோக்கங்களுக்காக முறைப்படி பதிவுசெய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கிறேன் :-

| இல. | பதிவு செய்யப் படும் திகதி | விபரம் | இடம் | மதகுரு அல்லது சொந்தக்காரர் அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளர் | கட்டிடம் எந்த மதத்திற்காகப் பதிவு செய்யப் படுகிறதோ அந்த மதம் |
|---|---|---|---|---|---|
| 1401 | 2007.05.15 | பெப்டிஸ் ஆலயம் | கெக்கிராவ | ஜே. ஆர். கொஸ்தா பாதிரியார் | கிறிஸ்தவம் |

எல். கே. ரத்னசிறி,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
280, பிரதான வீதி,
கொழும்பு 11,
2007, யூன் 6.
7-84

---

## தொல்பொருள் கட்டளைச் சட்டம்

எல். டி.-பி. 277/40

(188 ஆம் அத்தியாயமான) தொல்பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் 18 ஆவது பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி தேசிய உரிமைகள் தொடர்பான அமைச்சர் அவர்களால் பிறப்பிக்கப்படுகின்ற கட்டளை.

அனுர பண்டாரநாயக்க,
தேசிய மரபுரிமைகள் அமைச்சர்.

கொழும்பு,
2007, மே 08.

### கட்டளை

இதன்கீழ் உள்ள அட்டவணையில் சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ள புராதன சிலை (188 ஆம் அத்தியாயமான) தொல்பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் விடயங்களுக்காக பாதுகாக்கப்பட்ட சிலை என இத்தால் வெளியிடப்படுகின்றது.

### அட்டவணை

பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களாக வெளிப்படுத்தப்பட வேண்டிய நினைவுச் சின்னங்கள்

1. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ஹெட்டிபொல பிரதேச செயலாளர் பிரிவில், கந்தேகம கிராம உத்தியோகத்தர் பிரிவில், கந்துபொட கிராம உத்தியோகத்தர் பிரிவில் நிக்கசலா ஆரண்ய சேனாசன வளவில் அமைந்துள்ள லென் லிப்பிய உள்ளடக்கப்பட்ட கட்டாரம் செதுக்கப்பட்ட பழைய இரண்டு பொய்கைகள்.
2. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ஹெட்டிபொல பிரதேச செயலாளர் பிரிவில், ஹிரிபொக்குண கிராம உத்தியோகத்தர் பிரிவில், நிக்கப்பிட்டிய கிராமத்தில் அமைந்த பன்சல்வத்த ஹேன காணிக்குரிய பழைய போயகெய மற்றும் கற்றூண்களைக் கொண்ட நிலம்.
3. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ஹெட்டிபொல பிரதேச செயலாளர் பிரிவில், முனிஹிரிகம கிராம உத்தியோகத்தர் பிரிவில், கல்கந்த கிராமத்தில் அமைந்துள்ள வெஹெரகல விஹாரை வளவில் உள்ள தொன்மை வாய்ந்த கட்டிடங்கள் இரண்டும் பொய்கையும்.
4. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ஹெட்டிபொல பிரதேச செயலாளர் பிரிவில், கந்தேகம கிராம உத்தியோகத்தர் பிரிவில், கந்தே மெதகம மகா சேத்தியகிரி விஹாரை வளவில் உள்ள தாதுகோபுரம், போதிகெய, பாதுகாக்கப்பட்ட இரண்டு கட்டிடங்கள், கட்டாரம் செதுக்கப்பட்ட லென் விஹாரை, லென்விபி குகை மற்றும் அதனைச் சூழ்ந்துள்ள புராதன எச்சங்கள்
5. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ஹெட்டிபொல பிரதேச செயலாளர் பிரிவில், கந்தே மெதகம கிராம உத்தியோகத்தர் பிரிவில், மெதகம கந்தேயில் உள்ள விஜய கல்லறை.
6. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ஹெட்டிபொல பிரதேச செயலாளர் பிரிவில், பமுனுகொல்ல பத்தலகொட குளக்கரையில் உள்ள தாதுகோபுரமும் டம்பிட்டி விஹாரைக்குரிய சிதைவுகளும்.
7. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், வாரியபொல பிரதேச செயலாளர் பிரிவில், மலகனே கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள வலகம்பா புராதன விஹாரைக்குரிய கட்டாரம் செதுக்கப்பட்ட லென் விஹாரையும் புராதன மதிலும்.
8. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், வாரியபொல பிரதேச செயலாளர் பிரிவில், நேட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவில், நுவரகந்த புராதன விஹாரை பூமிக்குரிய புராதன சைத்திய பாதம, ஆசன்சரய புராதன கல்வெட்டுக்கள், பிராக்மிய எழுத்துக்களைக் கொண்ட குகை மற்றும் லென் விஹாரை.
9. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ரிதிகம பிரதேச செயலாளர் பிரிவில், இல. 604, நாஹல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள நாஹல்ல புராதன அம்பலம்.
10. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ரிதிகம பிரதேச செயலாளர் பிரிவில், இல. 604, நாஹல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவில் பொல் கும்புர சாகல்லிபுர புராதன விஹாரைக்குரிய கட்டாரம் செதுக்கப்பட்ட 05 கற்குகைகளும் பாறை கல்வெட்டு கற்றூண்களும்.
11. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ரிதிகம பிரதேச செயலாளர் பிரிவில், இல. 569, தெல்விட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள தெல்விட்ட புராதன விஹாரை வளவில் உள்ள சிலை மண்டபம்.
12. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ரிதிகம பிரதேச செயலாளர் பிரிவில், கனேகொட கிராம உத்தியோகத்தர் பிரிவில் பானகமுவ பாம்பருவ புராதன விஹாரைக்குரிய, புராதன சிலை மண்டபமும் கட்டாரம் செதுக்கப்பட்ட மூன்று குகைகளும்.
13. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ரிதிகம பிரதேச செயலாளர் பிரிவில், கனேகொட கிராம உத்தியோகத்தர் பிரிவில் வெஹெரகொட புராதன விஹாரை பூமிக்குரிய சைத்திய கொடல்ல மற்றும் கற்றூண்கள்.
14. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ரிதிகம பிரதேச செயலாளர் பிரிவில், பஹல ஓகொடபொல கிராம உத்தியோகத்தர் பிரிவில் வில்கம் வெஹெர புராதன விஹாரை வளவில் உள்ள சைத்திய கொடல்ல கற்றூண்கள், கற்பாறையில் செதுக்கப்பட்ட படிக்கட்டுக்கள்.
15. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ரிதிகம பிரதேச செயலாளர் பிரிவில், இல. 586, மஹவெல கிராம உத்தியோகத்தர் பிரிவில் பாதெனிய கிராமத்தில் அமைந்துள்ள வில்கம் வெஹெர மற்றும் புராதன விஹாரை வளவில் அமைந்துள்ள கல்வெட்டுக்கள், புராதன தாதுகோபுரம், அதனைச் சூழவுள்ள புராதன சிதைவுகள்.
16. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ரிதிகம பிரதேச செயலாளர் பிரிவில், இல. 624, அக்கர பணஹ கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள அலவல கிராமத்துக்குரிய அலவல கல்வெட்டு.
17. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ரிதிகம பிரதேச செயலாளர் பிரிவில், இல. 603, ரம்படகல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள பெத்கமயாய தொல்பொருளாய்வு இடத்துக்குரிய நான்கு கல்வெட்டுக்களும் கட்டாரம் செதுக்கப்பட்ட 5 குகைகளும் உட்பட ஏனைய தொல்பொருட்கள்.
18. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ரிதிகம பிரதேச செயலாளர் பிரிவில், இல. 601, ஓகொடபொல கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள கொட்டங்க கிராமத்துக்குரிய கொட்டங்க கல்வெட்டு.
19. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ரிதிகம பிரதேச செயலாளர் பிரிவில், இல. 539, கொட்டுஹேன கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஸ்ரீவிசுத்தாராம புராதன விஹாரை வளவுக்குரிய புராதன தூபியும் கட்டிட சிதைவுகளும்.
20. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், உடுபத்தாவ பிரதேச செயலாளர் பிரிவில், வத்துவத்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஸ்ரீ சுனந்தாராம விஹாரை வளவில் அமைந்துள்ள டம்பிட்டிய விஹாரையும் போய சீமா எல்லைக்குள் இருக்கும் தாது கோபுரமும்.
21. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், குளியாப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், ஹொரவடுவத்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஸ்ரீ சுதர்சன சைலபிம்பாராம புராதன விஹாரை பூமிக்குரிய புராதன சிலை மண்டபம்.
22. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், கட்டுபொத்த பிரதேச செயலாளர் பிரிவில், திஸ்ஸவ கிராம உத்தியோகத்தர் பிரிவில், கும்புக்வெவ, ஸ்ரீ நாகருக்காராம விஹாரை வளவில் உள்ள டம்பிட்டி விஹாரை.
23. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், இப்பாகமுவ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 489, தொலுவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள தொலுவ ரங்கிரிமட ரஜமஹா விஹாரை வளவில் உள்ள கட்டாரம் செதுக்கப்பட்ட குகை. திக்கெய அமைந்துள்ள குகையில் புத்தரின் புனித பாதம் மற்றும் குகை செதுக்கல்களைக் கொண்ட குகை.
24. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், இப்பாகமுவ பிரதேச செயலாளர் பிரிவில், பண்டாரகல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள பண்டாரகல போகஹ முல்வத்த, கலுகல என்னும் இடத்தில் அமைந்துள்ள கல்வெட்டும் கனுபாதம் கல் கட்டிட சிதைவுகளும் புராதன தாது கோபுரமும்.
25. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், பொல்பித்திகம பிரதேச செயலாளர் பிரிவில், சாலியகம பிரதேசம் 343 ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள மங்களாராம கனேகந்த ரஜமஹா விஹாரை வளவுக்குரிய கண்டி யுகத்தின் ஓவியங்கள் கொண்ட சிலை மண்டபம் மற்றும் கல்வெட்டுக்களை உள்ளடக்கிய சகல குகைளும் மற்றும் பாறையில் செதுக்கப்பட்டுள்ள புத்த பெருமானின் புனித பாதம், கற்றூண்களும் மற்றும் தாது கோபுரமும்.
26. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், மாஸ்பொத்த பிரதேச செயலாளர் பிரிவில், ஒக்கமுவ கிராம உத்தியோகத்தர் பிரிவில், கலுகல்ல கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ நீலகிரி ரஜமஹா விஹாரை வளவுக்குரிய கட்டாரம் செதுக்கப்பட்ட கட்டாரம் லென, பாறையின் உச்சியில் உள்ள சைத்திய சின்னங்களும் கந்த பிரதேசத்தில் பரந்துள்ள ஏனைய தொல்பொருள் சின்னங்களும்.
27. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ரஸ்நாயக்கபுர பிரதேச செயலாளர் பிரிவில், இல. 267, கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஹேனேகெதர பிரிவில் துண்டு இல. 80 கொண்ட கலுகல் உள்ள பிரதேசத்தில் அமைந்த கட்டாரம் செதுக்கப்பட்ட குகையும் தாது கோபுரமும்.
28. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், மாகோ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 166, கோன்வெவ, வதகஹகல புராண விஹாரைக்குரிய, புராதன சிலை மண்டபம்.
29. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், மாகோ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 206, பொத்துவெவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் குருகொட கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஸ்ரீ சாக்யமுனி விஹாரை வளவுக்குரிய புராதன கற்றூண்கள் கொண்ட சின்னங்கள்.
30. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், மாகோ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 138, கட்டம்புவாவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் தியபெட்டே புராதன விஹாரை பூமிக்குரிய கட்டாரம் செதுக்கப்பட்ட லென் விஹாரையும் 2 கல்வெட்டுக்களும் பாறைகளில் செதுக்கப்பட்ட 4 கட்வெட்டுக்களும்.
31. வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில், மஹாவெவ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 524, மஹாவெவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள மஹாவெவ நாகாராம புராண விஹாரைக்குரிய டம்பிட்டி விஹாரை.
32. மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில், மாத்தளை பிரதேச செயலாளர் பிரிவில், ராஜ வீதிய கிராமத்தில் அமைந்துள்ள பிரித்தானிய ஆட்சிக்குரிய நிர்வாக உத்தியோகத்தரின் வாசஸ்தலம்.
33. மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில், பல்லேபொல பிரதேச செயலாளர் பிரிவில், பல்லேபொல வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள வேலுவனாராம புராண விஹாரை வளவில் உள்ள சிலை மண்டபமும் அட்டுவையும்.
34. மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில், உக்குவெல பிரதேச செயலாளர் பிரிவில், நாகொல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குரிய புராதன பின்தாலிய.
35. மத்திய மாகாணத்தில், நுவரெலியா மாவட்டத்தில், ஹங்குரன்கெத்த பிரதேச செயலாளர் பிரிவில், கொட்டல கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குரிய புனித எம்மானுவேல் தேவாலயம்.
36. மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், பாத்தஹேவாஹெட்ட பிரதேச செயலாளர் பிரிவில், உடவெல உடகம கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள ஹெந்தான ரஜமஹா விஹாரை வளவுக்குரிய புராதன சிலை மண்டபமும் ஆவாச மண்டபமும்.
37. மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், யட்டிநுவர பிரதேச செயலாளர் பிரிவில், கடுகண்ணாவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் கடுகண்ணாவ நகரத்தில் உள்ள டோசன் கோபுரம்.
38. மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், ஹங்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவில், இல. 432 கிராம உத்தியோகத்தர் பிரிவில் அன்வில்வத்த எனும் காணியில் உள்ள சீதா லென என்று அழைக்கப்படும் கட்டாரம் செதுக்கப்பட்ட கற்குகை.
